janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2024 மார்ச் 10 - மார்ச் 16 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 49




# பாஜகவை கதிகலங்க வைத்த பீகார் பொதுக்கூட்டம்



# இந்தியா கூட்டணித் தலைவர்கள் எழுச்சியுரை



**பீகாரில் 'இந்தியா' கூட்டணி தலைவர்கள் பங்கேற்ற மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காந்தி மைதானமே மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.**

ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் தேஜஸ்வி பிப்ரவரி 20 ஆம் தேதி அம்மாநிலத்தில் உள்ள முசாபர் நகரில் "மக்கள் நம்பிக்கை பயணம் (ஜன் விஸ்வாஸ் யாத்ரா)" தொடங்கினார். அந்தப் பயணத்தின் நிறைவாக பாட்னா காந்தி மைதானத்தில் நடைபெற்றதுதான் இந்தக் கூட்டம். இதில், ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் லாலு பிரசாத், காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தீபங்கர் பட்டாச்சார்யா, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் உள்ளிட்ட "இந்தியா" கூட்டணி கட்சித் தலைவர்கள் எழுச்சி உரையாற்றினர்.

"பாஜக பொய்களின் தொழிற்சாலை. ஆனால் ஆர்ஜேடி உரிமை மற்றும் வளர்ச்சியின் தொழிற்சாலை. நாங்கள் மக்களின் உரிமைகள், வேலைகளுக்காகப் போராடுகிறோம்" என்று ராஷ்டிரீய ஜனதாள தளத்தின் தலைவர் தேஜஸ்வி கூறினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா பேசும் போது, "பிரதமர் மோடியின் உத்தரவாதம் என்று கூறுகிறார்களே, அவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. கறுப்புப் பணம் முழுவதும் மீட்கப்பட்டு ஒவ்வொருவரின் வங்கிக் கணக்குக்கும் 15 லட்சம் ரூபாய் கிடைத்துவிடும் என்று பிரதமர் மோடி பேசினாரே, அது நிறைவேறியதா? இப்படித்தான் அவருடைய உத்தரவாதங்கள் இருக்கின்றன" என்று குற்றம்சாட்டினார். ஏறத்தாழ 10 லட்சம் பேர் அலை அலையாகத் திரண்டு வந்து, அதிகாரத்தில் இருந்து பாசிஸ்ட்டுகள் வீசியெறியப்படுவார்கள் என்பதை குறிப்பால் உணர்த்தினர்.

## கேரளா: இடது முன்னணி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள்



பன்னியான் ரவீந்திரன்
திருவனந்தபுரம்



ஆனி ராஜா
வயநாடு



வி.எஸ்.சுனில் குமார்
திருச்சூர்




சி.ஏ.அருண்குமார்
மாவேலிக்கரா

## பேராசான் காரல் மார்க்ஸ் 141வது நினைவு நாள்


"இந்த பூமி தனிப்பட்ட
மனிதனுடையதோ, ஒரு
சமூகத்தினுடையதோ,
ஒரு தேசத்தினுடையதோ அல்ல.
ஏன் மனிதனின் கூட்டுச் சொத்துமல்ல...
நாம் பூமிக்கு விருந்தினர் மட்டுமே.
பூமியில் நமக்கு கிடைத்ததைவிட
உயர்ந்த நிலையில், வரும்
தலைமுறைக்கு கைமாற்றிக் கொடுக்க
வேண்டிய கடப்பாடு நமக்கு உள்ளது.

– கார்ல் மார்க்ஸ்



கட்சிக் கடிதம்

# அம்பலப்பட்டு நிற்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் 3



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாட்டில் வாழும் 140 கோடி மக்கள் தொகையில் 60% முதல் 70% வரை வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.**

வேளாண் பெருமக்கள் உற்பத்தியில் காலம், காலமாக ஈடுபட்டு வருகின்றனர். உழவர்களைப் போற்றியும், புகழ்ந்தும் கவிஞர் பெருமக்கள் பல படைப்புகளைத் தந்துள்ளனர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவப் பெருந்தகை,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்"**

என்று புகழ்ந்துரைத்தார்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று உரைத்தான் மகாகவி பாரதி.

போற்றுதலுக்குரிய உழவர் பெருங்குடி மக்களின் கடின உழைப்பால், பிற நாடுகளிலும் உணவிற்காக கையேந்தி நின்ற நமது நாடு, இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று ஏற்றுமதி செய்கின்றது.

நாடு தன்னிறைவு என்பது விவசாயிகளின் உழைப்பால் வந்தது. ஆனால் விவசாயிகள் வாழ்க்கையில் தன்னிறைவை இன்று வரை எட்ட இயலவில்லை.

நாடு விடுதலை பெற்ற பின்னர், நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு, மற்ற அனைத்துத் துறைகளைக் காட்டிலும் வேளாண்மைக்கே முன்னுரிமை அளிப்பேன் என்று கூறினார்.

விவசாய உற்பத்திப் பொருளுக்கு கட்டுப்படியான விலை கொடுக்க முடியவில்லை. அதற்கு மாறாக, அவர்களுக்கு வழங்கப்படும் உரம், பூச்சி மருந்து, விதைகள் ஆகியவற்றுக்கு அரசு மானியம் வழங்கும் என்று அறிவித்து, வழங்கவும் செய்தார்.


ஆனால், மோடியின் ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கி வந்த மானியங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு, மானியங்களே இல்லை என்ற நிலைக்குச் சென்று விட்டது.

மானியங்கள் குறைக்கப்பட்டது மட்டுமின்றி, விவசாயிகளுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார் மோடி.

மூன்று சட்டங்களும் முழுமையாக விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள் ஆகும். இந்தச் சட்டங்கள் மூலம் பெரும் கார்ப்பரேட் நிறுவன முதலாளிகள் கொள்ளை லாபம் பெற வழிவகை செய்வதாகும். இதனை நிறைவேற்றி அமல்படுத்துவதன் மூலம், கொள்ளை லாபம் ஈட்டும் பெரும் முதலாளிகள் கோடிக்கணக்கான ரூபாய்களுக்குத் தேர்தல் பத்திரங்களை வாங்கிக் குவித்து, எவருக்கும் தெரியாமல் பாஜகவுக்கு நன்கொடை வழங்கிட வழிவகை கண்டதே வேளாண் சட்டங்கள் ஆகும்.

மொத்தமாக கூறின் தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு, குறு, நடுத்தர தொழில் செய்வோர், வர்த்தகர்கள் என அனைவருக்கும் எதிரான சட்டங்களை நிறைவேற்றி, அதன் மூலம் பொருளாதார லாபத்தை பெரும் நிறுவனங்களிடம் இருந்து பல கோடிகளை பத்திரங்கள் மூலம் நன்கொடையாகப் பெற ஆர்.எஸ்.எஸ். கும்பல் கண்டறிந்த கேடுகெட்ட முறையே தேர்தல் பத்திரங்கள் ஆகும்.

இத்தகைய மோசடித்தனமான, தேர்தல் பத்திரத் திட்டத்தை எதிர்த்து ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்ற தன்னார்வ அமைப்பு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கில் காங்கிரஸ் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி ஆகியவன தங்களையும் வழக்கில் இணைத்துக் கொண்டன (14.9.2017).




2.1.2018 ல் தேர்தல் பத்திர திட்டம் குறித்த அறிவிப்பாணையை ஒன்றிய அரசு வெளியிட்டது.

7.11.2022 ல் சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் வருடத்தில் பத்திர விற்பனை நாட்களை 70ல் இருந்து மேலும் 15 நாட்களை அதிகரித்து, 85 நாட்கள் என உயர்த்துவதற்குத் தேர்தல் பத்திர திட்டம் திருத்தப்பட்டது.

16.10.2023 ல் தேர்தல் பத்திர வழக்கை விசாரிக்க அரசியல் சாசன அமர்வுக்கு, தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

1, பி.ஒய்.சந்திர சூட், தலைமை நீதிபதி
2, சஞ்சீவ் கண்ணன், நீதிபதி
3,பி.ஆர்.கவாய், நீதிபதி
4,ஜே.பி.பார்த்திவாலா, நீதிபதி
5, மனோஜ் மிஸ்ரா, நீதிபதி

ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு அமைக்கப்பட்டது.

2019 ஏப்ரல் 12ல் தேர்தல் பத்திரம் குறித்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

31.10.2023 ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2.11.2023 ல் விசாரணை முடிந்து தீர்ப்பு நிறுத்திவைக்கப்பட்டு இருந்தது.

15.2.2024 ல் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தலைமை நீதிபதி தலைமையில் அமைந்த ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் முழு விசாரணையை மேற்கொண்டு, ஒருமனதாக அளித்த தீர்ப்பினை நாட்டு மக்கள் அனைவரும் தவறாமல் படிக்க வேண்டும் என விரும்புகிறோம்.

கட்சித் தோழர்கள் அனைவரும் தீர்ப்பை முழுமையாகப் படித்து, நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் வீடு, வீடாகச் சென்று விளக்கமளிக்க வேண்டும்.

பொதுமக்கள் அனைவரிடத்திலும் இத்தீர்ப்பை எடுத்துச் செல்வதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் அயோக்கியத்தனம் வெளிப்படும்.

ஆர்.எஸ்.எஸ். கும்பல் தாங்கள் கடந்த 10 ஆண்டுகளில் செய்த தவறுகள் அனைத்தையும் மூடி மறைத்து, தங்களின் ஆட்சி சாதனை படைத்த ஆட்சி என்று திரும்பத் திரும்ப கூறி வருகின்றது.

ஒரு உண்மையை மறைத்து, திரும்பத் திரும்ப பொய்யைக் கூறி உண்மையாக்கி விட முடியும் என்று நம்பி, நாட்டு மக்களை ஏமாற்ற கடும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் இழைத்திட்ட துரோகத்தை மறைப்பதன் வாயிலாக, தாங்கள் மீண்டும் மூன்றாம் முறையாக ஆட்சியில் அமர்ந்து விடலாம் என்று பகல் கனவு காண்கின்றது.

அவர்களின் பகல் கனவை நிர்மூலமாக்க, நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமது தலையாய கடமை.

இதனை ஒவ்வொரு தோழரும் உணர்ந்து, காலம் அறிந்து செயல்பட வேண்டிய கடமையை தோழர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தேர்தல் பத்திரங்கள் குறித்து உச்சநீதிமன்றம் அளித்திட்ட தீர்ப்பின் விவரங்கள் வருமாறு:

1. ஒரு அரசியல் கட்சி பெறும் நன்கொடை குறித்து வாக்காளர் தெரிந்து கொள்வது அவசியம்.
2. அப்போதுதான் அவர் தனது வாக்குரிமையை உறுதியான முறையில் செயல்படுத்திட முடியும்.
3. ஆனால் தேர்தல் பத்திரத் திட்டம் அந்த நோக்கத்தை சிறிதளவு கூட பூர்த்தி செய்யவில்லை.
4. ஜனநாயக முறையிலான அரசு அமைக்க, தேர்தல் முறையில் நேர்மை நிலவுவது முக்கியமானது.
5. அதனால்தான் நேர்மையான, சுதந்திரமான தேர்தல் நடத்துவதை அரசியல் சட்டம் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துள்ளது.
6. அரசியல் கட்சிகளுக்கு கீழ்க்கண்ட இரண்டு காரணங்களுக்காக நன்கொடை அளிக்கப்படுகின்றது.
   1. அரசியல் கட்சிகளுக்கு ஆதரவளிப்பது.
   2. பிரதிபலன் எதிர்பார்த்து நன்கொடை அளிப்பது.

பிரதிபலன் எதிர்பார்த்து அளித்திடும் நன்கொடைகளை அரசியல் ஆதரவு நிலைப்பாடாக கருத முடியாது.

**கட்சி வாரியாக தேர்தல் பத்திரம் மூலம் பெற்ற நிதி விவரம் (கோடியில்)**

| கட்சி | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|---|
| பா.ஜ.க | 210.00 | 1,450.890 | 2,555.000 | 22.385 | 1,033.7000 | 1294.1499 |
| காங்கிரஸ் | 5.00 | 383.260 | 317.861 | 10.075 | 236.0995 | 171.0200 |
| திரிணாமூல் காங்கிரஸ் | 0.00 | 97.280 | 100.4646 | 42.000 | 528.1430 | 325.1000 |
| தேசியவாத காங்கிரஸ் | 0.00 | 29.250 | 20.500 | 0.000 | 14.0000 | -- |
| பி.ஆர்.எஸ். | 0.00 | 141.500 | 89.153 | 0.000 | 153.0000 | -- |
| தெலுங்கு தேசம் | 0.00 | 27.500 | 81.600 | 0.000 | 3.5000 | 34.0000 |
| ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் | 0.00 | 99.840 | 74.350 | 96.250 | 60.0000 | 52.0000 |
| பி.ஜே.டி | 0.00 | 213.500 | 50.500 | 67.000 | 291.0000 | 152.0000 |
| திமுக | 0.00 | 0.000 | 45.500 | 80.000 | 306.0000 | 185.0000 |
| சிவசேனா | 0.00 | 60.400 | 40.980 | 0.000 | -- | -- |
| ஆம்ஆத்மி | 0.00 | -- | 17.765 | 5.950 | 25.1200 | 45.4500 |
| ஜே.டி.யு | 0.00 | 0.000 | 13.000 | 1.400 | 10.0000 | -- |
| சமாஜ்வாதி கட்சி | 0.00 | 0.000 | 10.840 | 0.000 | 3.2100 | 0.0000 |
| ஜே.டி.எஸ் | 6.03 | 35.250 | 7.500 | 0.000 | 0.0000 | -- |
| அகாலி தளம் | 0.00 | 0.000 | 6.760 | 0.000 | 0.5000 | 0.0000 |
| அஇஅதிமுக | 0.00 | 0.000 | 6.050 | 0.000 | 0.0000 | 0.0000 |
| ஜே.ஆர்.டி. | 0.00 | 0.000 | 2.500 | 0.000 | 0.0000 | -- |
| ஜே.எம்.எம். | 0.00 | 0.000 | 1.000 | 0.000 | 0.0000 | -- |
| எஸ்.டி.எப் | 0.00 | 0.500 | 0.000 | 0.000 | 0.0000 | 0.0000 |
| எம்.ஜி.பி | 0.00 | 0.000 | 0.000 | 0.000 | 0.5500 | -- |
| மொத்தம் | 221.03 | 2,539.170 | 3,441.324 | 325.060 | 2,664.8225 | -- |

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# மோடியின் பொய் மூட்டைகள்




# தமிழ்நாட்டு மக்களிடம் விலைபோகாது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சாடல்

மோடியின் பொய் மூட்டைகள் தமிழ்நாட்டு மக்களிடம் விலை போகாது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகாட்டமுடன் கூறியுள்ளது. இதுதொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில், பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு திரும்பத் திரும்ப வந்து செல்வது வியப்பளிக்கிறது. அரசு நிகழ்ச்சிக்காக வந்தாலும் பாஜகவின் தேர்தல் பரப்புரையில் தீவிரம் காட்டி வரும் பிரதமர் மோடி, மறந்தும் கூட உண்மை பேசக்கூடாது என்று உறுதி காட்டி வருவதை அவரது தேர்தல் பரப்புரை பேச்சுகள் வெளிப்படுத்தி வருகின்றன.

நேற்று சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் அவரது பேச்சு பொய் முட்டைகள் மொத்த வியாபார விளம்பரமாக அமைந்துள்ளது.

கடந்த 2023 டிசம்பர் முதல் வாரத்திலும், மூன்றாவது வாரத்திலும் தலைநகர் சென்னை உட்பட பத்து மாவட்டங்கள் கடுமையான இயற்கை பேரிடரை சந்தித்தது. இங்கு மக்கள் இயல்பு வாழ்க்கை நிலைகுலைந்து, சாலைகள், பாலங்கள் உள்ளிட்ட கட்டுமானங்களும், விவசாயிகள் சாகுபடி செய்திருந்த பயிர்களுக்கும் பெரும் சேதாரம் ஏற்பட்டது.

ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் வான்வழி ஆய்வு செய்தார். நிவாரணப் பணிகள் நிறைவடையும் நேரத்தில் ஒன்றிய அரசின் நிதியமைச்சர் தென் மாவட்டங்களில் கள நிலவரத்தை நேரில் கண்டறிந்தார்.

ஒன்றிய அரசின் உயர்மட்ட ஆய்வுக் குழுக்களும் பார்வையிட்டன. அதிகாரிகள் கொண்ட உயர்மட்ட ஆய்வுக் குழு மாநில அரசின் இயற்கை பேரிடர் தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், நிவாரண நடவடிக்கைகளையும் பாராட்டி, உதவிக்கரம் தருவதாக உறுதி அளித்துச் சென்றன.

மாநில முதலமைச்சர், இயற்கை பேரிடர் பாதிப்புகளை விரிவாக சேகரித்து, அதன் விபரங்களை பட்டியலிட்டு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட இயற்கை பேரிடரை தேசிய பேரிடராக அறிவித்து ரூ.37 ஆயிரத்து 917 கோடி நிவாவரண உதவி நிதி வழங்குமாறு பிரதமரை நேரில் சந்தித்து முறையிட்டுள்ளார். கடிதங்கள் எழுதி வலியுறுத்தியுள்ளார்.

**ஆனால். ஒன்றிய அரசு வழக்கமாக வழங்கும் பேரிடர் கால உதவி தவிர கூடுதலாக ஒரு ரூபாயும் வழங்காமல் வஞ்சித்து விட்டதை பிரதமர் மூடி மறைத்து, ஒன்றிய அரசின் உதவி இல்லாமல் பேரிடர் நிவாரணப் பணிகளை போர்க்கால வேகத்துடன் மேற்கொண்டதுடன் மக்கள் மறுவாழ்வுக்கு ரொக்கப் பண உதவியும் செய்த தமிழ்நாடு அரசின் மீது பிரதம மோடி அபாண்டமாக பழி சுமத்துவதை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக சேர்ந்து ஒன்றிய உள்துறை அமைச்சரை சந்தித்து, கோரிக்கையின் நியாயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு தேர்தல் களத்தில் பாஜக அதிகாரத்தில் அமர்ந்தால், வெளிநாட்டில் பதுக்கப்பட்டிருக்கும கறுப்புப் பணத்தை மீட்டு வந்து, நாட்டின் குடிமக்களுக்கு வங்கியில் தலா ரூ. 15 லட்சம் வீதம் வைப்பு நிதியாக செலுத்துவோம் என்று மேடைக்கு மேடை பாஜக தலைவர்கள் முழங்கியதை மக்கள் மறந்து விடவில்லை. ஆட்சியில் அமர்ந்ததும் கள்ளப் பணத்தையும், சட்ட விரோதப் பணப் பரிமாற்றத்தையும் தடுக்க, புழக்கத்தில் இருந்த ரூ. 500, ரூ. 1000 பணத்தாள்கள் செல்வது என அறிவித்து, ரூ.2000 மதிப்பு பணத் தாளை அறிமுகப்படுத்தினர். இத்திட்டம் படுதோல்வி அடைந்ததை நாடறியும், பதுக்கல்காரர்கள் கை மேலோங்கியதால் ரூ.2000 மதிப்பு பணத்தாளும் கடந்த 2023 செப்டம்பர் 30 முதல் செல்லாக் காசு ஆகிவிட்டது. .

விவசாயிகளை அழித்து விட்டு, விவசாய நிலங்களை, பெரும் பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கைமாற்றித் தரும் விவசாயிகள் விரோத மூன்று வேளாண் வணிக சட்டங்களை மோடி அரசு நிறைவேற்றியது.

**இதனை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் ஓராண்டு காலம் நீடித்தது. விவசாயிகள் போராட்டத்தை ஒடுக்க, சிதைக்க, சிதறடிக்க மோடி, யோகி, அரியானா அரசுகள் கூட்டுச் சதி செய்தன. அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டன. ஆனாலும் விவசாயிகள் உறுதியுடன் போராடி மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெற வைத்தனர்.**

போராடிய விவசாயிகளிடம் மோடி அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அதனால் மீண்டும் விவசாயிகள் போராட்டம் பேரெழுச்சியுடன் நடந்து வருகிறது.

இது பற்றி வாய் திறக்காத பிரதமர் மோடி, இண்டியா கூட்டணியை நாளொரு பொழுதும், பொழுதொரு வண்ணமும் வலிமைப்படுத்தி வரும் திமுக தலைவர் மீதும், அவர் குடும்பத்தினர் மீதும் அவதூறு சேறுவாரி வீசியுள்ளார்.

பிரதமர் மோடியின் பொய் மூட்டைகள் மொத்த வியாபாரம் தமிழ்நாட்டு மக்களிடம் விலை போகாது என்பதை அவர் புரிந்து கொள்ளும் வகையில் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.

## இடுக்கண் களைந்த மோடியின் நட்பு!



முகேஷ் அம்பானி - நீடா அம்பானி தம்பதியர் கடைசி மகன் ஆனந்துக்கும், ராதிகா மெர்ச்சென்டுக்கும் வரும் ஜூலை 12ம் தேதி திருமணம் நடைபெற உள்ளது. இதற்கான திருமண முன்வைபவ நிகழ்ச்சிகள் கடந்த 1 ம் தேதி குஜராத்தில் முகேஷ் அம்பானியின் தாய் கோகிலா பென்னின் ஊரான ஜாம்நகரில் தொடங்கியது.

400 ஏக்கரில் புதிய நகரத்தையும் 3,000 ஏக்கரில் 'வந்தாரா' என்ற புதிய வனத்தையும் அம்பானி குழுமம் உருவாக்கி உள்ளது. இதையொட்டி ஜாம்நகரில் உள்ள விமான நிலையம் 10 நாட்களுக்கு சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டது. மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்த பல பத்தாண்டுகளாக கோரிக்கை வைத்திருந்தும், அதை கண்டுகொள்ளாத மோடி இன்று நாள்தோறும் 140 விமானங்கள் ஜாம்நகர் விமான நிலையத்தில் தரையிறங்கச் செய்துள்ளார். தேர்தல் நேரம் இது என்றாலும் தன் கார்ப்பரேட் நண்பர் அம்பானிக்காக எதையும் செய்யும் இடத்தில் மோடி உள்ளார் என்பதை இது காட்டுகிறது.

ஏழ்மையும் வறுமையும் தலைவிரித்து ஆடும் நாட்டில் பல கோடி செலவில் நடத்தப்பட்ட பிரம்மாண்ட திருமணத்திற்கு ஒட்டுமொத்த இந்திய திரையுலகமும் ஜாம்நகரில் குவிந்தது.

அமெரிக்க பாப் பாடகியும் நடிகையுமான ரிஹானாவின் இசைக்கச்சேரி நடைபெற்றது. இந்த இசைகச்சேரிக்காக மட்டும் ரூ.75 கோடி செலவிடப்பட்டது.

மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ், பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜூகெர்பெர்க், அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்பின் மகள் இவாங்கா உட்பட வெளிநாட்டு பிரபலங்களும் இந்தியாவை சேர்ந்த ஆனந்த் மஹிந்திரா உள்ளிட்ட பெரும் தொழிலதிபர்கள் என மொத்தம் 1,000 சிறப்புவிருந்தினர்கள் ரூ 1250 கோடி செலவில் 3 நாட்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்று ஊர் திரும்பி வருகின்றனர்.

ஆடம்பரமாக செலவழிக்கப்பட்ட தொகையில் சுமார் 2000 பள்ளிக்கூடங்கள் கட்டி ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டு இருக்கலாம். அல்லது 500 மருத்துவமனைகளை சகல வசதிகளுடன் கிராமப்புறங்களில் உருவாக்கி இருக்கலாம். ஆனாலும் நிலப்பரபுத்துவப் பகட்டை பலரும் அறிய முடியுமா? எனவே தான் இப்படிப்பட்ட ஆடம்பர திருமணங்களை தொடர்ந்து அரங்கேற்றி வருகிறார்கள் கார்ப்பரேட் கனவான்கள்!

## புதிய மருந்தை கண்டு பிடித்த செந்தில் குமார்!

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், நைட்ரசோ கெட்டிரோ சைக்ளிக் சேர்ம வகையைச் சார்ந்த வேதிப் பொருள்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் இயங்கியவர் செந்தில்குமார். இவை, புற்றுநோயைக் குணப்படுத்தும் வேதிப் பொருள்களாகும். இந்த ஆராய்ச்சியில் தன் விருப்பத்துக்கு ஏற்ப ஒரு வேதிப்பொருள்களை உருவாக்கும் முறையை பேராசிரியர் ஜெயராமனிடமும் உடன் ஆராய்ச்சி செய்த நண்பர்களிடமும் கற்றுத்தேர்ந்தவர் செந்தில் குமார். அவர் கண்டு பிடித்த 'எக்ஸ்ப்லைஃபெப்' (Ex-blifep) எனும் மருந்து. சமீபத்தில், அமெரிக்க உணவு மற்றும் மருந்து தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (FDA), இதற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது.

இன்று, உலக அளவில் மொத்தம் 4,383 மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன. பல்வேறு நோய்களைக் குணப்படுத்த இந்த மருந்துகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால், இவற்றில் ஒன்றுகூட இந்தியாவில் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்த மனக்குறையை இப்போது போக்கி, இந்தியாவுக்கே பெருமை சேர்த்திருக்கிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த முனைவர் செந்தில்குமார். இந்தியாவிலிருந்தபடி இவர் கண்டுபிடித்திருக்கும் 'எக்ஸ்ப்லைஃபெப்' என்ற மருந்துக்கு இப்போது உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துவருகிறது. விற்பனைக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது கூடுதல் சிறப்பு!

## வினாடி - வினா

1. சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர், அதிபர் ஸ்டாலினின் இயற்பெயர் என்ன?
2. வானியல் ஆய்வுக்குப் பயன்படும் தொலைநோக்கியை (டெலஸ்கோப்) கண்டுபிடித்தவர் யார்?
3. சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளின் அண்ணன் பெயர் என்ன?
4. ராமாயணம் வரலாறா? புராணமா(Mythology)?
5. நாம் பருகும் சோடா போன்ற குளிர்பானங்களில் உள்ள வாயு எது?
6. இரும்புதுருப்பிடித்தலின் அறிவியல் விளக்கம் என்ன?

**விடைகள் 12 ஆம் பக்கம்**



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 49

# ‘மோடி கியாரண்டி’க்கு ஏது கியாரண்டி?!

அந்த தொலைக்காட்சி விளம்பரத்தில் குழந்தைகள் சொல்கின்றன: “எங்களை எல்லாம் அம்மா பார்த்து வருகிறார். எங்க அம்மாவை மோடி பார்த்துக் கொள்வார்”.

ஒரு இளைஞன் தொழில் தொடங்கப்போவதாகத் தன் அப்பாவிடம் சொல்கிறான். “அதுக்கு என்ன கியாரன்டி” என்று கேட்கிறார் அப்பா. “மோடியின் கியாரண்டி” என்கிறான் மகன்.

பிரதமர் மோடியும், விளம்பரத்தில் வரும் மாடல்கள் போல விதவிதமாய் உடை அணிந்து கொண்டு, பல கூட்டங்களில் “மோடி கியாரண்டி” பற்றி பேசுகிறார்.

ஏற்கனவே சொன்ன கியாரன்டிகள் எல்லாம் என்ன ஆயின? 2014 நாடாளுமன்றத் தேர்தலில் மோடி அளித்த வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றி இருந்தால், இப்போது புதிய உத்தரவாதங்களை கொடுப்பதற்கு அவருக்கு யோக்கியதை இருந்திருக்கும்.

சொன்னதில் எதைச் செய்திருக்கிறார்?

ஒரு துடிப்பான பங்கேற்புள்ள ஜனநாயகம் இருக்கும் என்று 10 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார். இப்போது ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கட்சி, ஒரே தலைவர் என்று சர்வாதிகாரம் பகிரங்கமாக உள் நுழைக்கப்பட்டு வருகிறது.

அடுத்து அனைவரையும், உள்ளடக்கிய நிலையான வளர்ச்சி, மேம்பாடு அடைந்த வாழ்க்கைத் தரம் என உத்தரவாதம் தந்தார். உலகத்தின் மூன்றாவது பெரிய முதலாளியாக அதானியை 10 ஆண்டுகளில் உருவாக்கிய மோடி, உலகத்திலேயே அதிக ஏழைகளைக் கொண்ட நாடாக இந்தியாவை மாற்றி இருக்கிறார்.

சாமானியர்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி இல்லை இது. மாறாக அவர்கள் வெளியே தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

அடுத்து, உற்பத்தித் திறன் கொண்ட இளைஞர்களை உருவாக்குவதாகச் சொன்னார். உலகத்திலேயே அதிக இளைஞர்கள் இருக்கும் நாடு இந்தியா. இதற்கு மோடி எந்த விதத்திலும் காரணம் இல்லை! ஆனால் 50 ஆண்டுகளாக காணாத அளவுக்கு வேலையின்மை தலைவிரித்து ஆடுகிறது. பக்கோடா போட்டு பிழைத்துக் கொள்ளுங்கள், அதுவும் ஒரு வேலை தானே என்று வெட்கமில்லாமல் சொல்கிறார்கள்.

உலகளாவிய போட்டி பொருளாதாரம் என்றார்கள். இந்தியாவை மொத்த உற்பத்தி குறியீட்டில் இந்தியாவை ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக ஆக்கிவிட்டோம் என்று இப்போதும் தம்பட்டம் படித்துக் கொள்கிறார். ஆனால் தனிநபர் வருவாயில் 120 வது இடத்தில் பின்தங்கி, பட்டினியில் கிடக்கிறது இந்தியா.

திறந்த மற்றும் வெளிப்படையான அரசாங்கம், அதன் வெளிப்பாடுகளில் மக்கள் சார்பான நிர்வாகம் என்பதும் பத்தாண்டுக்கு முன் தந்த வாக்குறுதி தான்.

தேசியப் பேரிடர்களில் மக்களுக்கு உதவுவதற்காக, 1948 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதி. அதை ஒழித்து விட்டு, அதனிடத்தில் பி எம் கேர்ஸ் என்ற திட்டத்தை கொண்டு வந்தனர். பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்தும் மற்ற பலரிடமிருந்தும் பல கோடிக் கணக்கான ரூபாயை வசூலித்தனர். அதில் எவ்வளவு பணம் இருக்கிறது, என்ன செலவு என்பதை யாருக்கும் தெரிவிக்க முடியாது என்று மறுத்து விட்டனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டபோது அது அரசின் பணமல்ல, பிரதமரின் பணம் என்று சொல்லிவிட்டார்கள்.

தேர்தல் நன்கொடை ரகசியம் இல்லாமல் வெளிப்படையாய் வழங்க வேண்டும் என சட்டம் இருந்தது. அதை மாற்றி, பெயரே தெரியாமல் பல கோடிக் கணக்கில் நன்கொடை வாங்க, தேர்தல் பத்திரத் திட்டம் கொண்டு வந்தார்கள்.

தேர்தல்களுக்கு யாரிடமிருந்து எந்த கட்சிக்கு எவ்வளவு பணம் வந்தது என்பதை அறிந்து கொள்வது மக்களின் உரிமை; எனவே தேர்தல் பத்திரம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் காரித் துப்பிவிட்டது.


இதுதான் இவர்களது வெளிப்படையான நிர்வாகத்தின் லட்சணம்!

ஆரவாரமாகச் சொன்னார்கள், “அச்சே தின் ஆனே வாலே ஹைன்”. நல்ல காலம் வருகிறதாம். அது அதானிக்கும் அம்பானிக்கும் அவர்களை ஒத்தவர்களுக்கு மட்டுமே வந்தது!

மோடி கொடுக்கும் கேரண்டிக்கு உண்மையில் ஏதாவது கேரன்டி உண்டா?

நாங்கள் மோடியின் குடும்பம் என்று மந்திரி பிரதானிகள் புதிதாய் சத்தமிடுகிறார்கள்.

அவர்களின் குடும்பத் தலைவர், கட்டிய மனைவியை கழற்றி விட்டவர் மட்டுமல்ல, திருமணமே ஆகவில்லை என்று தைரியமாக பொய்யும் சொன்னவர்.




2 ஆம் பக்கத் தொடர்ச்சி

7. அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதை சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் அந்த நன்கொடை அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதை உணர்த்துவதாக இருக்க வேண்டும்.
8. கறுப்புப் பணம்:
   அனைத்து நன்கொடைகளையும் மக்கள் நலன் சார்ந்த கொள்கைகளை வகுப்பதற்காக கொடுக்கப்படுவது இல்லை.
   ஏனெனில் நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் இடம்பெறாத கட்சிகளுக்கும் நன்கொடைகள் அளிக்கப்படுகின்றது.
   தேர்தல் முறையில் வெளிப்படைத் தன்மைக்காகவும், கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காகவும் தேர்தல் பத்திரம் கொண்டு வந்திருப்பதாக ஒன்றிய அரசு கூறுவதை ஏற்க முடியாது.
   தகவல் அறியும் உரிமையை பாதிக்காமல், கறுப்புப் பணத்தை ஒழிக்க மாற்று வழிகள் எத்தனையோ உள்ளன.
9. ஆனால் தேர்தல் பத்திரத் திட்டம், அரசியல் சட்டத்தின் 19 (1 )(ஏ) பிரிவு வழங்கும் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம், தகவல் அறியும் உரிமை ஆகியவற்றுக்கு எதிரானதாக அமைந்துள்ளது.
10. நன்கொடை அளித்தவர்களின் ரகசியத்தை பாதுகாப்பது, ரகசிய வாக்களிப்பு போன்றது என்ற ஒன்றிய அரசின் வாதத்தையும் ஏற்க முடியாது.
11. ஆளும்கட்சி தனிநபர்களையும், நிறுவனங்களையும் நிர்பந்தம் செய்து நன்கொடை வசூலிக்க வாய்ப்புள்ளது.
12. கார்ப்பரேட் நிறுவனங்கள் எல்லையின்றி நன்கொடை அளிப்பதற்காக, கம்பெனி சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தது தன்னிச்சையானது.
    இச்செயல் அரசியல் சட்டத்தின் 14 வது பிரிவு வழங்கும் சமத்துவ உரிமை மீறும் செயல்.
13. சட்ட விரோதம்:
    இந்த காரணங்களால் தேர்தல் பத்திரத் திட்டம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பளிக்கிறோம்.
14. தேர்தல்பத்திரத்திட்டம்ரத்துசெய்யப்படுகின்றது.
15. தேர்தல் பத்திரத் திட்டத்திற்காக மக்கள் பிரதிநிதித்துவசட்டம், கம்பெனிசட்டம் ஆகியனவற்றில் செய்யப்பட்ட சட்டத் திருத்தங்களும் செல்லாதவை என்று அறிவிக்கின்றோம்.
16. எனவே பாரத ஸ்டேட் வங்கி தேர்தல் பத்திரம் வெளியிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.
17. உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியிலிருந்து இதுவரை வழங்கப்பட்ட தேர்தல் பத்திரங்கள் விவரம், வாங்கப்பட்ட தேதி, வாங்கியவரின் பெயர், பத்திரங்களின் மதிப்பு போன்ற அனைத்து விவரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் வரும் 2024 மார்ச் 6ஆம் தேதிக்குள் பாரத ஸ்டேட் வங்கி சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியிருந்தது.
    இப்போது ஸ்டேட் வங்கி, இதனை வெளியிட மேலும் அவகாசம் கேட்டுள்ளது என்பது பா.ஜ.க. வைக் காப்பாற்றும் நடவடிக்கையாக கண்டிக்கப்படுகிறது. விரல் நுனியில் உள்ள இந்த தகவல்களை தரமறுப்பது ஏன்?
18. மேலும் தேர்தல் பத்திரங்களை எந்தெந்த அரசியல் கட்சிகள், எந்தெந்த தேதியில், எவ்வளவு பணமாக்கின என்ற விவரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.
19. ஸ்டேட் பேங்க் அளித்திட்ட விவரங்கள் அனைத்தையும் தேர்தல் ஆணையம் தனது அதிகாரப்பூர்வமான இணையதளத்தில் மார்ச் 13ஆம் தேதிக்குள் வெளியிட வேண்டும்.
20. இதுவரை பணமாக்கப்படாமல் உள்ள தேர்தல் பத்திரங்களை, அரசியல் கட்சியோ அல்லது அவற்றை வாங்கியவரோ, பாரத ஸ்டேட் வங்கியிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
21. அவ்வாறு பெறப்படும் பத்திரங்களுக்குரிய தொகையை ஸ்டேட் பாங்க், அவற்றை வாங்கியவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.
22. நீதிபதிகள் தங்களின் தீர்ப்பில் கடந்த 2017 – 2018 ஆம் நிதியாண்டு முதல் 2022 – 2023 நிதியாண்டு வரை அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடை விவரங்களையும் வெளியிட்டுள்ளனர்.
23. தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள தகவல் படி 2016 முதல் 2022 வரை 28 ஆயிரத்து 30 தேர்தல் பத்திரங்கள் விற்பனையாகியுள்ளன.
24. இவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் 16 ஆயிரத்து 438 கோடியாகும்.
25. தேர்தல்பத்திரங்கள்மூலம் அதிகவருவாய்ஈட்டிய கட்சி பாஜக. இக்கட்சி இந்தக் கால கட்டத்தில் 10 ஆயிரத்து 122 கோடி ரூபாய் பெற்றுள்ளதாக தெரிகிறது.
26. தேர்தல் பத்திரங்கள் மூலம் கட்சிகள் பெற்ற மொத்தத் தொகையில் இது ஏறக்குறைய 60 விழுக்காடாகும்.

உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி தேர்தல் ஆணையம், மார்ச் 13ஆம் தேதிக்குள் வெளியிட வேண்டும். அவ்வாறு தேர்தல் ஆணையம் வெளியிட்ட பின்னர், பாஜக யார் யாரிடம், எவ்வளவு நிதி பெற்றது என்கிற முழு விவரம் வெளியாகும்.

அதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் முகமூடி கிழிந்து, நாட்டு மக்களின் முன்பாக அம்பலப்பட்டு நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# வழக்கறிஞர்கள் காலவரையற்ற உண்ணாநிலை

## தமிழை உயர்நீதிமன்ற மொழியாக்க ஒன்றிய அரசு மறுப்பது ஏன்?




**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தும் தாய்மொழி தமிழுக்கு இன்னும் கிடைக்கவில்லை. நீதிமன்றத்திற்குள் நுழைய முடியாத மொழியாகவே தமிழ் இருந்து வருகிறது.**

சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதியைப் பெற முதலில் ஆங்கிலம் படிக்க வேண்டும். பின்னர் தான் நீதி. இதற்கு எதிராக எத்தனை போராட்டங்கள் நடந்துள்ளன. எதற்கும் ஒன்றிய அரசு அசைந்து கொடுக்கவில்லை. ஆங்கிலம் தெரியாத காரணத்தால், 'தன் வழக்கில் என்ன நடக்கிறது?' என்பதே தெரியாதவர்களாக மக்கள் திணறுகிறார்கள்! தங்களின் தாய் மொழிகளில் வழக்கு நடந்தால் தான் அவர்களால் நீதியைப் பெற முடியும்.

இதனால், "தமிழை உயர்நீதிமன்ற மொழியாக்கு" என்ற கோரிக்கை நிறைவேறும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டம் பிப்ரவரி 28 ஆம் தேதி தொடங்கியது. வழக்கறிஞர்கள், சட்ட மாணவர்கள், தமிழ்ச் சான்றோர் என 24 பேர் பங்கேற்ற இந்த உண்ணாநிலைப் போராட்டம், சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் நடைபெற்றது. விடுதலைப் போராட்ட வீரரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவருமான இரா.நல்லகண்ணு உண்ணாநிலையை தொடங்கி வைத்தார்.

வழக்கறிஞர்கள் கு.ஞா.பகவத்சிங், ஈ.மெய்யப்பன், மு.வேல்முருகன், திசை இயந்திரன், சி.கா.தெய்வம்மாள், பாரதி, கலைச்செல்வன், யாசர்கான், அருண்குமார், செல்வகுமார், புகழ்வேந்தன், சங்கர், புளியந்தோப்பு மோகன், இராமு(எ) மருது. சட்டக் கல்லூரி மாணவர்கள் நிறைமதி, வணங்காமுடி, வளர்மதி. இவர்களுடன் தமிழ்ச் சான்றோர்கள் சின்னப்பா தமிழர், குருசாமி, பாவலர் கீர்த்தி, தமிழ்பித்தன், சிவகாளிதாசன், இரமேஷ், தொல்காப்பியன் ஆகிய 24 பேர் கோரிக்கை நிறைவேறும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்திற்குத் தலைமை தாங்கி வரும் வழக்கறிஞர் பகத்சிங்கின் தந்தை






குருசாமியும் உண்ணா நிலையில் பங்கேற்றுள்ளார். இவர் 90 வயதிலும் போராட்டக் களத்தில் எடுத்துக்காட்டாக இருந்தார்.

வழக்கறிஞர் பகத்சிங் – வழக்கறிஞர் பாரதி இணையரின் மகன், சட்டக் கல்லூரி மாணவர் வணங்காமுடியும் உண்ணா நிலையில் ஈடுபட்டுள்ளார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறை போராட்டக் களத்தில் பங்கேற்றுள்ளது.

ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் ஆங்கிலத்துடன் இந்தியும் உயர்நீதிமன்ற மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசும் உச்சநீதிமன்றமும் அனுமதி அளித்துள்ளது. இந்த அனுமதியை தமிழ்நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் தர மறுப்பது அரசியலமைப்பு சட்ட உரிமைக்கு எதிரானது. பாகுபாடானது.

தமிழில் சட்ட ஆணைய கலைச்சொல் அகராதி அனந்த நாராயணன் தலைமையிலான குழுவின் முயற்சியில் பல தொகுதிகள் வெளியிடப்பட்டுவிட்டது. 1970 களில் திமுக ஆட்சியில் இருந்த போது அரசியலமைப்பு சட்டம் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அது நீதிபதி மகராஜன் கமிட்டியால் மீண்டும் மொழிபெயர்க்கப்பட்டது. ஆனால், இவை எல்லாம் உயர்நீதிமன்றத்தில் புழக்கத்திற்கு வராமலேயே போய்விட்டன.

## முதலமைச்சர் தலையிட்டு தீர்வு காண வலியுறுத்தல்!

உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க கோரி நடைபெற்றுவரும் காலவரையற்ற உண்ணாநிலை போராட்டத்தில் முதலமைச்சர் தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என வழக்கறிஞர் செயல்பாட்டுக்குழு மற்றும் பொதுமக்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். போராட்டம் தொடங்கிய ஒரு வார காலத்தில், நாட்டின் பிரதமர் தமிழ்நாட்டில் மூன்று தேர்தல் பரப்புரை கூட்டங்களில் பங்கேற்றுள்ளார். ஆனால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்ற கோரிக்கை மீது மூச்சுவிடாமல் அமைதி காத்து சென்று விட்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தமிழ் மொழி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. வழக்கொழிந்து வரும் மொழிக்கு பெரும் நிதி ஒதுக்கீடு செய்யும் ஒன்றிய பாஜக அரசு தமிழ் மொழியை, தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக எது இருக்க வேண்டும் என தீர்மானிக்கும் உரிமையை மறுக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டு வேண்டுமென்றே தாமதப்படுத்தப்படுகிறது.



இந்த நிலையில் வழக்கறிஞர்களும், தமிழ் பற்றாளர்களும் தொடங்கியுள்ள காலவரையற்ற உண்ணாநிலை போராட்டம் முழு வெற்றி பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வாழ்த்துக்கூறி, போராட்டத்துக்கு முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. கற்றறிந்த வழக்கறிஞர்கள் மற்றும் தமிழ் மொழி பேணி வளர்க்கும் பற்றாளர்கள் உடல்நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போராட்டத்தில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு

கோரிக்கை நிறைவேறும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்திற்கு மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.



மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு
தமிழ்நாடு

நாள் 02.03.2024

ஊடகங்களுக்கு செய்தி

தமிழை வழக்காடு மொழியாக அங்கீகரிக்க காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தொழிற்சங்கங்கள் ஆதரவு

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வருகிறது. வழக்கறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களுமாக 24 பேர் இப்போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

மாநிலத்தின் அலுவல் மொழியை ஆங்கிலத்துடன் சேர்த்து அந்த மாநில உயர்நீதிமன்றத்தின் கூடுதல் அலுவல் மொழியாக குடியரசு தலைவரின் ஒப்புதலுடன் சேர்க்கலாம் என்று அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 348(2) வழிவகை செய்திருக்கிறது. அதன்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக ஒப்புதல் வழங்க கோரி தமிழ்நாடு சட்டப்பேரவை ஒருமனதாக 6.12.2006ம் நாளன்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது.

இதனை உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் முழு அவையின் ஆலோசனைக்கு அனுப்பியதாகவும், அதை ஏற்க நீதிபதிகள் மறுத்து விட்டதாகவும் ஒன்றிய அரசு போக்குக் காட்டுகிறது. அரசியல் சாசன விதிகளின்படி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளிடம் இதற்கான ஆலோசனையோ ஒப்புதலோ பெறுவதற்கான தேவை எதுவும் இல்லை என்பதே உண்மையாகும்.

ஏற்கனவே ராஜஸ்தான், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார் ஆகிய நான்கு மாநில உயர் நீதிமன்றங்களில் இந்தி வழக்காடு மொழியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டம் வழங்குகிற வழக்காடு மொழி உரிமையை, தமிழ்நாட்டுக்கு தர மறுப்பது பாரபட்சமானதாகும்; இது இந்தி பேசாத மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

ஏற்கனவே தமிழ்நாடு என்று பெயர் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்த சங்கரலிங்கனாரின் உயிர் பறிக்கப்பட்டது. மீண்டும் அது போன்ற நிலை ஏற்படாத வகையில், தமிழை வழக்காடு மொழியாக காலதாமதம் இன்றி அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் சார்பாக ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

வழக்கறிஞர்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவைத் தெரிவிக்கிறோம்.
உரிய விரைவான நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிலாளர்களும் இணைந்து போராட வேண்டிய நேரிடும் என்பதைத் தெரிவிக்கிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மு.சண்முகம்.எம்.பி. LPF | க.அ.ராஜாஸ்ரீதர் HMS | ம.இராதாகிருஷ்ணன் AITUC | ஜி.சுகுமாறன் CITU | டி.வி. சேவியர் INTUC |
| வி.சிவகுமார் AIUTUC | எம்.திருநாவுக்கரசு AICCTU | எஸ்.மாயாண்டி TUCC | ஆர் சம்பத் WPTUC | |
| இரா.அந்திரிதாஸ் MLF | ஏ.எஸ்.குமார் LTUC | க.பேரறிவாளன் LLF | | |

"ஏற்கனவே தமிழ்நாடு என்று பெயர் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்த சங்கரலிங்கனாரின் உயிர் பறிக்கப்பட்டது. மீண்டும் அது போன்ற நிலை ஏற்படாத வகையில், தமிழை வழக்காடு மொழியாக காலதாமதம் இன்றி அறிவிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் சார்பாக ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம். வழக்கறிஞர்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவைத் தெரிவிக்கிறோம். உரிய விரைவான நடவடிக்கை எடுக்காவிட்டால் தொழிலாளர்களும் இணைந்து போராட நேரிடும் என்பதைத் தெரிவிக்கிறோம்" என்று மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பில் தொமுச, ஏஐடியூசி, சிஐடியு, எச்எம்எஸ், ஐஎன்டியுசி, ஏஐயுடியுசி, ஏஐசிசிடியு உட்பட 12 மத்திய தொழிற்சங்கங்கள் இடம் பெற்றுள்ளன.

"இதற்கு எதிராக கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாக நீதிமன்றத்தில் தமிழை ஒலிக்கச் செய்வதற்காக கருத்தரங்குகள், தொடர் முழக்கக் கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், டெல்லியில் மாநாடு என்று பற்பல அமைப்புகள் பல்வேறு வகைகளில் போராடியும் எதுவும் நடக்கவில்லை. 27 ஆண்டுகளாக இந்தி பேசாத மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கும் முடிவில்லை. இதனால் தான் கோரிக்கை நிறைவேறும் வரையிலான உண்ணா நிலை போராட்டத்தைத் தொடங்கினோம்" என்கிறார் வழக்கறிஞர் பகத்சிங்.

போராட்டக் களத்திற்கு நேரில் சென்று பல்வேறு அமைப்புகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி மற்றும் இந்திய வழக்குரைஞர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் எஸ்.அருணாசலம் உள்ளிட்டோர் போராட்டக் களத்திற்கு நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்.

தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் ஏற்பட்டுள்ள அநீதிக்கு எதிராகப் போராட அனைத்துத் தரப்பு மக்களும் முன்வர வேண்டும். ஜல்லிக்கட்டு உட்பட அனைத்து உரிமைகளையும் பெற்று தந்தது மக்கள் போராட்டம் தான். ஆங்கிலம் தெரியாமல் அல்ல; அரசியல் சட்ட உரிமை காக்க வழக்கறிஞர்கள் போராட்டக் களத்திற்கு வந்துள்ளனர். அந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதும் தமிழ் மக்களின் கடமை.

மக்களுக்காகத் தான் சட்டமும், நீதியும். அதனை உறுதி செய்வதற்காகவே நீதிமன்றங்களும் இருக்கின்றன. ஆனால், அவை மக்கள் பேசும் மொழியில் இயங்க மறுப்பது என்ன நீதி? நீதிமன்றங்களில் தாய்மொழி மறுக்கப்படுவது என்பது அம்மாநில மக்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது என்று தானே அர்த்தம்.

**- வ.மணிமாறன்**

# பாசிச மோடியை வீழ்த்துவோம் சர்வதேச மகளிர் தின சபதமேற்போம்



மு.கண்ணகி




**மார்ச் 8 அன்று உலகம் முழுவதும் மகளிர் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் சுரண்டப்படும் தொழிலாளர்களை அணிதிரட்டுவதற்காக மார்க்ஸ் வழிகாட்டுதலில் முதல் அகிலம் அமைக்கப்பட்டிருந்தது. புகழ் பெற்ற மேதினப் போராட்டமும் ஏங்கல்ஸின் உதவியுடன் இரண்டாவது அகிலம் வளர்ச்சிப் போக்கில் சோசலிஸ்ட் பெண்கள் இயக்கம் உதயமானது.**

கிளாரா ஜெட்கின் பெண்களுக்கு பொருளாதார சுதந்திரத்தையும், அதன் விளைவாக வளரும் சமூக அரசியல் சமத்துவத்தையும் அளிக்க வல்லது என்பதை வலுவாக வலியுறுத்தினார். முதலாம் உலக போருக்குப் பின் நிறைய பெண்களின் பங்கேற்பு உழைப்பு சந்தைக்கு கிடைத்த பிறகு ஜெட்கினின் உழைக்கும் அம்மாக்களுக்காக பேசவும் எழுதவும் தொடங்கினார்.

வீட்டிலும் வெளியிலும் அதிகப்படியான உழைக்கும் நேரங்கள் போதுமான அளவில் சரியான கவனிப்பின்மை, ஓய்வின்மை பெண்ணுடைய நலத்தை பெரிதும் பாதித்ததை நோக்கிய ஜெட்கின் எட்டுமணி நேர வேலை, சனி மதியம் ஒய்வு, தாய் சேய் நலம் தொழிற்சாலைகளில் பெண் மேற்பார்வையாளர்கள், வேலைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியம், கடுமையான வேலைகளிலிருந்து விலக்கு ஆகியவற்றை வலியுறுத்தினார்.

அலெக்ஸாண்திரா கொலந்தாய் தான் பெண்களுக்கு என தனி ஒரு இயக்கத்தை தோற்றுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பெண்களுக்கான ஓட்டுரிமையையும் நேரடியாக சரிசமமான, ரகசியமான ஓட்டு, சமமான வேலைக்கு சமமான சம்பளம், பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பு, பிரசவம் மற்றும் பிள்ளை வளர்ப்புக்கு அரசின் முழுப்பண உதவி ஆகியவற்றை வலியுறுத்தினார்.

கிளாரா ஜெட்சின் வழிகாட்டுதலில் ஜெர்மானியர் ஸ்டட்கார்ட் நகரில் 1907 ஆம் ஆண்டில் முதல் முறையாக உலக சோசலிஸ்ட் பெண்கள் மாநாடு நடைபெற்றது. பெண்களுக்கு வாக்குரிமை தீர்மானம் நிறைவேற்றியது.

அமெரிக்க நகரில் 1908 மே 3 அன்று மகளிர்தின கொண்டாட்டாம் நடைபெற்றது. இதுவே முதல் மகளிர் தினம். 1909ல் ஆர்பாட்டம் நடைபெற்றது. இது தேசிய அளவில் முதன் முறையாக கடைபிடிக்கப்பட்ட மகளிர்தினம்.

உலக அளவில் மகளிர்தினம் கடைபிடிக்க வரலாற்று சிறப்புமிக்க மாநாடு 1910 ல் டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன் ஹேகனில் சோசலிஸ்ட் பெண்கள் மாநாடு கிளாரா ஜெட்சின் தலைமையில் நடைபெற்றது. 17 நாடுகளை சேர்ந்த 100 பெண்கள் கலந்துகொண்ட மாநாட்டில் ஆண்டில் ஒரு நாளை மகளிர்த்தினமாக கொண்டாடா வேண்டும் என்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போராடிப்பெற்ற உரிமை நாளான மார்ச் 8 மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது. 1975 ல் ஐ.நா சபை சர்வதேச மகளிர் ஆண்டாக அறிவித்து கௌரவித்தது. உலகம் முழுவதும் கொண்டாடப்படும் மார்ச் 8 சர்வதேச மகளிர்தினம் போராடிப்பெற்ற உரிமை தினம் இன்று நகைகடை, ஜவுளி கடை, பன்னாட்டு நிறுவனங்களின் பொருள்களின் விற்பனைக்கான விளம்பர நாளாக கடைபிடிக்கப்பட்டு வருவது வருத்ததிற்குரிய செய்தியாகும்.

போராட்ட வரலாறு மறைக்கப்பட்டு உலக மகளிர் தினம் விளம்பர கொண்டாட்டமாக மாற்றப்படும் சூழலில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான அதிகரித்து வரும் வன்முறைகள், தாக்குதல்கள் மாற்றுக் கருத்தை முன்வைப்பவர்கள் மீதான தாக்குதல்கள் நாடு முழுவதும் வெறுப்புணர்வை உண்டாக்கிவிடுதல், தலித் மற்றும் சிறுபான்மையினர் மீது தாக்குதல்கள், கல்வி நிலையங்கள் மீதான தாக்குதல்கள் என நாடு முழுவதும் அபாயகாரமான நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி கொடுப்போம் என்று வாய் ஜாலம் காட்டும் பா.ஜ.க அரசின் அமைச்சர்களும், ஆதவராளர்களும் பெண்களுக்கு எதிராக மட்டும்மல்ல பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விலைவாசி உயர்ந்து, வேலையின்மை ஏழை, எளிய மக்கள் மீதான சுமை அதிகரித்துள்ளது. வாழ்வாதார உரிமை பறிபோய் கொண்டுள்ளது. மதவாத அரசியல், சாதி ரீதியாக பிளவுப்படுத்துதல் மூலம் ஏற்படும் கலவரங்களில் பெண்கள் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகிறார்கள். மோடி அரசின் பிற்போக்குத்தனமான கொள்கைகளால் பெண்களுக்கு எதிரான தாக்குதல் அதிகரித்து வருகிறது.

இந்திய விடுதலைப் போரிலும் பெண்விடுதலை, சமூக, பொருளாதார, அரசியல் விடுதலை, ஆண், பெண் சமத்துவம், வேலை, கூலி, வாக்குரிமை, கல்வி உரிமை, சுகாதாரம், மருத்துவம், உணவு, தண்ணீர் அடிப்படை தேவைகளுக்காகப் போராடுகிறது. சமூக மாற்றத்திற்கான போராட்டங்களை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் முன் எடுக்கிறது.

இந்தியாவில் ஒன்றிய மோடி அரசு ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது ஒரு கட்சி, ஒரு அதிபர் ஆட்சி முறையை அமல்படுத்தி கூட்டாட்சி முறைக்கு எதிரான அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்கிறது.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஆட்சி நடத்தி நெருக்கடியை கொடுத்து வருகிறது. வருமான வரித்துறை, அமலாக்கத்துறை (CBI & ED) மூலம் நெருக்கடி ஏற்படுத்தி தேர்தல் மூலம் வெற்றிபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி பா.ஜ.க. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுகிறது. ஆர்.எஸ்.எஸ். ன் பாசிச கொள்கையை நிறைவேற்ற ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கிறது. மாற்றுக் கருத்து சொல்பவர்களை கொலை செய்வதன் மூலம் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகிறது.

பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள், சிறுபான்மை மக்கள் மீது வன்முறைத் தாக்குதல் அதிகரித்துள்ளது. காஷ்மீரில் கதுவா மாவட்டத்தில் சிறுமி ஆசிபா தொடங்கி மணிப்பூர் பெண்கள் வரை பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அன்றாட நிகழ்வுகளாக தொடர்ந்து வருகிறது.

பிரதமர் மோடி குஜராத் முதல்வராக இருந்த போது கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை காரணம் காட்டி இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. பெண்களுக்கு எதிரான பாலியல் தாக்குதல்களும் கர்ப்பிணிப் பெண்கள் வயிற்றிலிருந்து குழந்தைகளை கத்தி முனையில் எடுத்து பெட்ரோல் ஊற்றி எரித்த சம்பவங்களும் அரங்கேறியது.

பில்கிஸ் பானுவின் குடும்பத்தில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டதோடு அவரது குடும்பத்தினரும் குழந்தைகளும் கோரப்படுகொலை செய்யப்பட்டனர். அதில் ஈடுபட்ட குற்றவாளிகள் 11 பேர் தண்டிக்கப்பட்டார்கள். குஜராத் நீதிமன்றம் நன்னடத்தை விதியின் அடிப்படையில் குற்றவாளிகளை விடுவித்தது. உச்சநீதிமன்றம் தலையிட்டு மீண்டும் குற்றவாளிகள் சிறையிலடைக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் வாங்கி பெருமை சேர்த்த தங்க மகள்கள் மல்யுத்த வீராங்கனைக்களுக்கு மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும் பா.ஜ.க.வின் எம்.பி.யுமான பிரிஜ் பூசன் சரண்சிங் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காததால் டில்லியில் ஜந்தர் மந்தரில் மல்யுத்த வீராங்கனைகள் மூன்றுமாத காலமாக போராடினர். கண்டுகொள்ளப் படாத நிலையில் போராட்டம் வலுவடைந்த போது பிரிஜ் பூசன் சரண்சிங் கைது செய்யப்பட்டார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் பெண்களுக்கு எதிரான, பாசிச ஒன்றிய மோடி அரசின் நடவடிக்கையை தடுத்திட இந்தியப் பெண்கள், மதச்சார்பற்ற ஜனநாயக அரசியலமைப்பை நிலைநிறுத்த. வெறுப்பு அரசியலையும் மதவெறி அரசியலையும் நிராகரிப்போம்! என்று சர்வதேச மகளிர் தினத்தில் உறுதியேற்போம்! செயல்படுத்துவோம்!

தொடர்புக்கு: 9442433177



## மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம்

முதல் உலக போரின் உச்சமாக ரஷ்ய – ஜெர்மனி இடையில் 3 ஆண்டுகள் போர் நடைபெற்றது. இதில் கொல்லப்பட்டவர்கள், போர்க்கைதிகளாக பிடித்து செல்லப்பட்டவர்கள், காணாமல்போனவர்கள் இப்படி பறிகொடுத்த லட்சகணக்கான தாய்மார்கள், மனைவிகள் வேதனையில் துடித்தவர்கள் போரை நிறுத்த வேண்டும், மன்னராட்சி ஒழிய வேண்டும் என்று லெனின் தலைமையில் கம்யூனிஸ்டுகளும், சோசலிஸ்டுகளும் போராடினர். இதில் சோசலிஸ்ட் பெண்களும் பங்கெடுத்தனர்.

தங்களோடு குழந்தைகளும், மற்றவர்களும் பசியோடு துடிப்பதை பொறுக்கமுடியாமல் பெண் தொழிலாளர்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், தொழிற்சாலைகள் ஆலைகளில் 16 மணி நேரம் வேலை, சுகாதாரம் காற்று, உணவு, தூக்கமின்றி பணிசெய்த பெண்களும் கொதித்து எழுந்தனர். 1917 மார்ச் 8 ரஷ்ய தலைநகர் பெட்ரோகிராடில் பெண்கள் வீதியில் இறங்கி போராடினார்கள். போராட்டத்தில் துப்பாக்கி சூடும், படுகொலைகளும் மேலும் எதிர்ப்பை உறுதிபடுத்தின. இப்புரட்சியில் ஜார் மன்னர் வீழ்ந்தார்.

மார்ச் 8 ஐ ரஷ்ய பெண் தொழிலாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் மகளிர் தினமாக கொண்டாட முடிவு செய்தனர். இந்த முடிவே உலகம் முழுவதும் மார்ச் 8 உலக மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது. பெண்கள் அமைப்புகளின் பல்வேறு போராட்டங்கள் மார்ச் 8 ஐ சர்வதேச மகளிர்த்தினமாக அறிவிக்க வலியுறுத்தியது.



த.லெனின்

**பாஜக 18 கோடி உறுப்பினர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சி என்று சொல்கிறது. சீன கம்யூனிஸ்ட் கட்சியில் 9 கோடியே 80 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சேர்ப்புமுறை தனித்துவம் கொண்டது.**

# பாஜகவில் சேர்ந்தால் பரிசுத்தர்

## கழிசடை அரசியலுக்கு கொள்கை சாயம்

ஆனால் பா.ஜ.க.வோ மிஸ்டு கால் முறையிலும், இணையதளத்திலும் யார் வேண்டுமானாலும் உறுப்பினராகலாம் என அறிவித்து சேர்த்தது. பாஜகவுக்கு தலைவர்கள் பற்றாக்குறை போலும், அதைத் தீர்க்க விலைபோகும் எதிர்க்கட்சித் தலைவர்களை, குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களை, ஊழல் பேர்வழிகளை தேர்ந்தெடுத்து தன் பக்கம் ஈர்த்து, தனக்கான தலைவர்களாக மகுடம் சூட்டிக்கொள்கிறது.

ஆர்.எஸ்.எஸ் சுயம் சேவக்குகளால் வழிநடத்தப்படும் பாஜகவுக்கு தலைவர்களும் தரப்படுவார்கள் தானே என்ற கேள்வி சிலருக்கு எழலாம். ஆனால் அந்த அமைப்பின் சனாதன, சாதி முறை ஆதரவு, ஊறிப்போன பெண்ணடிமைத்தனம், சிறுபான்மையினர் எதிர்ப்பு, மாநில உரிமைகளுக்கு எதிரான அதன் நிலைபாட்டில் ஊறிப்போனவர்களை வெகுஜன தலைவர்களாக மக்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் தான் பிள்ளை பிடிப்பவர்கள் போல் பாஜக அலைகிறது.

கிரிமினல், ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் எந்த எதிர்க்கட்சித் தலைவரும் பா.ஜ.க.வில் சேர்ந்து விட்டால் அவர்கள் மீதான மத்திய அமைப்புகளின் விசாரணைகள் நிறுத்தப்பட்டு விடுகின்றன. இதனால் தான் பாஜக ஒரு கறை நீக்கும் ‘‘சலவை எந்திரம்’’ என்று கிண்டலடிக்கப்படுகிறது.

### அஜித் பவார்

அஜித் பவாருக்கு சர்ச்சைகள் புதிதல்ல. அவர் பல விசாரணை அமைப்புகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை எதிர்கொண்டார். இந்த வழக்குகள் ஒரு கூட்டுறவு வங்கி மற்றும் மாநில நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பானவை பத்தாண்டுகளுக்கும் மேலாக இந்த வழக்குகள் நடந்து வருகின்றன.

காங்கிரஸ் என்சிபி ஆட்சியில் அஜித் நீர்வளத்துறை அமைச்சராகவும், விதர்பா நீர்ப்பாசன மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும் இருந்தபோது, நீர்ப்பாசனத் திட்டங்களில் முறைகேடுகளை அனுமதித்ததாக குற்றம் சாட்டப்பட்டார். பொதுநல வழக்குகளின் அடிப்படையில், மகாராஷ்டிரா ஊழல் தடுப்புப் பிரிவு (ஏசிபி) இது தொடர்பாக நீதிமன்ற கண்காணிப்பு விசாரணையைத் தொடங்கியது. ஆனால் அவர் 2019ல், பா.ஜ.க வின் தேவேந்திர பட்னாவிஸுடன் இணைந்து ஆட்சிக்கு வந்தவுடனேயே அடுத்த நாள், ஏசிபி மும்பை உயர் நீதிமன்றத்தில் குற்றமற்றவர் என்று அறிக்கை சமர்ப்பித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆனால், அந்த அறிக்கை இன்னும் நீதிமன்றத்தால் ஏற்கப்படவில்லை.

### பாவனா காவலி

2020 ஆம் ஆண்டில், மகாராஷ்டிராவின் யவத்மால் வாஷிம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவாலி, இவர் தலைவராக இருந்த மஹிலா உத்கர்ஷா பிரதிஸ்தான் என்ற பொது அறக்கட்டளையில் இருந்து 7 கோடி ரூபாய் முறைகேடாகப் பயன்படுத்தியதாக அமலாக்கத் துறை அவர் மீது குற்றம் சாட்டியது.

இருப்பினும், ஜூலை 2022 இல், கவாலி ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா அணியில் சேர்ந்தார். அவர் மீதான வழக்கில் அதன் பிறகு எந்த வளர்ச்சியும் இல்லை. நித்திய சமாதியை அடைந்தது அவ்வழக்கு!

### பிரதாப் சர்நாயக்

ஜூன் 2021ல், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனாவில் இவர் இருந்த போது, பாஜகவுடனான கருத்து வேறுபாடுகளை தீர்த்து சரிசெய்யுமாறு தாக்கரேவுக்கு கடிதம் எழுதினார்.

ரூ. 5,600 கோடி மதிப்பிலான நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் (என்எஸ்இஎல்) ஊழல் தொடர்பாக சர்நாயக் மற்றும் அவரது குடும்பத்தினர் அமலாக்கத்துறையின் விசாரணையை எதிர்கொண்டனர். அவரது நிறுவனத்திற்கு சொந்தமான 112 மனைகளும் கைப்பற்றப்பட்டது. அவர் பின்பு ஏக்நாத் ஷிண்டே முகாமுக்கு சென்றவுடன் அமலாக்கத்துறை விசாரணையும் முடிவுக்கு வந்துவிட்டது.

### ஹசன் முஷ்ரிஃப்

மார்ச் 2023ல், பண மோசடி வழக்கு தொடர்பாக மும்பை மற்றும் கோலாப்பூரில் உள்ள முஷ்ரிப்பின் வீடு மற்றும் அலுவலகங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. முஷ்ரிப் சார் சேனாபதி சாந்தாஜி கோர்படே சர்க்கரை ஆலை, அப்பாசாகேப் நல்வாடே காதின்லாஜ் தாலுகா கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் முஷ்ரிப் தலைவராக இருக்கும் கோலாப்பூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக பாஜக தலைவர் கிரித் சோமையா குற்றம் சாட்டினார்.

ஆனால் ஜூலை 2023ல், அஜித் பவாருடன், இவர் தேசியவாத காங்கிரஸ் கட்சி (என்சிபி) கட்சியை உடைத்து பாஜகவுடன் கைகோர்த்த பிறகு, அவரது வீட்டில் விசாரணையோ அல்லது சோதனையோ நடந்ததாக எந்த செய்தியும் இல்லை. பாஜ.கவுக்கு ஆதரவு என்றவுடன் ‘‘பளிச்‘‘ என்று பரிசுத்தமாக்கப்பட்டார்.

### சாகன் புஜ்பால்

மகாராஷ்டிராவில் வலுவான இதர பிற்படுத்தப்பட்ட சமூக முகமான புஜ்பால், அஜித் பவார் தலைமையிலான என்சிபியுடன் செல்ல முடிவு செய்தார். புஜ்பால் மாநில பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, 2006ல், மூன்று திட்டங்களுக்காக, 100 கோடி ரூபாய்க்கு மேல் ஒப்பந்தம் வழங்கியதில், முறைகேடு நடந்ததாக, புகார் எழுந்தது. அமலாக்கத் துறையால் மற்றொரு பண மோசடி வழக்கும் அவர் மீது பதிவு செய்யப்பட்டு, 2016ல், மத்திய நிறுவனத்தால் கைது செய்யப்பட்டார். ஆனால் இப்போது எந்தக் கவலையும் இன்றி சிறப்பான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பாஜகவில் இணைந்த முன்னாள் காங்கிரஸ் முதலமைச்சர்கள் சிலர்:

### அசோக் சவான்

காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான அசோக் சவான் பாஜகவில் இணைந்தார்.

அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் 1999 ம் ஆண்டு கார்கில் போர் வீரர்கள் மற்றும் போரில் மாண்ட வீரர்களின் விதவைகளுக்காக கட்டப்பட்ட ஆதர்ஷ் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் முதன்மைப் பயனாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டது. அமலாக்கத் துறையும் இந்த வழக்கை விசாரித்து சவான் இதில் ஒரு குற்றவாளியாக குறிப்பிடப்பட்டார்.

பாஜ.கவில் அவர் இணைந்துவிட்ட பிறகு சிபிஐ வழக்கு விசாரணையை தொடங்கவில்லை. அமலாக்கத்துறையும் கைதுகளை தொடரவில்லை. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பதற்கு இணங்க சுற்றம் வேண்டி குற்றப் பத்திரிகையையும் தாக்கல் செய்யவில்லை. ஏனெனில் பாஜக ஜோதியில் ஐக்கியமான பிறகு அனைத்தும் புனிதமாகி விடுகிறது.

### விஜய் பகுகுணா

பகுகுணா மார்ச் 2012 முதல் ஜனவரி 2014 வரை உத்தரகாண்ட் காங்கிரஸ் முதலமைச்சராக பதவி வகித்தவர்.

மே 2016 ல், அவரும், 8 முன்னாள் எம்எல்ஏக்களுடன் பாஜகவில் இணைந்தார்.

### நாராயண் தத் திவாரி

திவாரி 2002 முதல் 2007 வரை உத்தரகாண்டின் மூன்றாவது முதலமைச்சராகவும், 1976 மற்றும் 1989 க்கு இடையில் மூன்று முறை காங்கிரஸ் சார்பாக உத்தரபிரதேச முதலமைச்சராகவும், ஆந்திரப் பிரதேச ஆளுநராகவும் பணியாற்றியவர் ஆவார். அவரும், அவரது மகன் ரோஹித் சேகர் ஆகியோர் பாஜக ஜோதியில் ஐக்கியமாகி உள்ளனர்.

இந்த வரிசையில் கேப்டன் அமரீந்தர் சிங், எஸ்.எம்.கிருஷ்ணா, ஹேமந் பிஸ்வா சர்மா , அருணாச்சல் மக்கள் கட்சியின் (பிபிஏ) 32 எம்எல்ஏக்களுடன் பாஜகவில் சேர்ந்த பெமா காண்டு என்று பட்டியல் தொடர்கிறது. அத்துடன் சுபாஷ் சந்திர போஸின் பேரன், கேரள முன்னாள் முதலமைச்சர் ஏ.கே.ஆண்டனியின் மகன், ராஜாஜியின் பேரன், லால்பகதூர் சாஸ்திரியின் பேரன், சங்கர் தயாள் சர்மாவின் பேரன் நாதா சிட் ஊழல் வழக்கில் சிக்கிய திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த சுவேந்து அதிகாரி நாடு முழுவதும் உள்ள மாநில கட்சிகளின் தலைவர்கள் என வரிசை கட்டி பிடித்துள்ளது பாஜக!

அதிமுகவை சேர்ந்த முன்னாள் அமைச்சர் உட்பட 14க்கும் மேற்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களை தன் கட்சியோடு இணைத்துள்ளனர். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் விஜயதாரணி அந்த வகையில் இப்போது இணைந்துள்ளார்.

### கிரண் குமார் ரெட்டி

பிரிக்கப்படாத ஆந்திரப் பிரதேசத்தின் கடைசி முதலமைச்சராக இருந்த ரெட்டி, மாநிலப் பிரிவினையைக் கடுமையாக எதிர்த்ததோடு, ஒன்றுபட்ட ஆந்திரத்தைப் பிரித்து தெலுங்கானாவை உருவாக்கிய அப்போதைய யுபிஏ அரசின் முடிவை எதிர்த்து 2014ல் காங்கிரஸில் இருந்து ராஜினாமா செய்தார்.


‘ஜெய் சம்யுக்த ஆந்திரா’ என்ற தனது சொந்த கட்சியை உருவாக்கி, 2014 தேர்தலில் வெற்றி எதுவும் கிடைக்காத நிலையில், 2018ல் மீண்டும் காங்கிரஸில் இணைந்தார். தற்போது அவர் பா.ஜ.க.வில் தனது புனித பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

### திகம்பர் காமத்

செப்டம்பர் 2022ல், கோவாவின் முன்னாள் முதலமைச்சர் திகம்பர் காமத் இரண்டாவது முறையாக பாஜகவில் இணைந்தார். மீண்டும் 2005ல் காங்கிரஸுக்குத் திரும்பிய அவர், மாநிலத்தில் மனோகர் பாரிக்கர் தலைமையிலான பாஜக அரசைக் கவிழ்ப்பதில் முக்கியப் பங்காற்றினார். மாறினால் மறப்போம் என்ற பா.ஜ.க.வில் இணைந்துள்ளார்.

2024 பொதுத் தேர்தலை எதிர்கொள்ள, ஆள் பிடிக்க தொடர்ந்து வலை வீசி வருகின்றது.

இக்கட்டுரை வெளியாகும் தருணத்தில் கூட பலர் பாஜகவின் திருவிளையாடல்களால் அதில் இணைந்து தங்களை பரிசுத்தராக மாற்றி கொண்டிருக்கலாம். பா.ஜ.க பத்தும் செய்யும்! அதிகாரத்திற்காக எந்த ஒழுக்கம் குன்றிய செயலையும் அது செய்யும்! இந்த கழிசடை அரசியலை முறியடிக்க கடமை ஏற்று களப்பணி ஆற்றுக!




தொடர்புக்கு: 9444481703

## நவால்னி ஜனநாயகத்தின் காவலரா?



ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சேய் நவால்னி ஆர்க்டிக் சிறைச்சாலையில் பிப்ரவரி 16 ஆம் தேதி அன்று திடீரென மரணம் அடைந்தார். அவர் எப்படி இறந்தார் என்பதற்கான உடற்கூறு ஆய்வோ (போஸ்ட் மார்ட்டம்), துல்லியமான விவரங்களோ வெளியாகவில்லை. ஆனால் அமெரிக்கா மற்றும் நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் ரஷ்ய அதிபர் புட்டின் கொன்றுவிட்டதாக குற்றம்சாட்டின. நவால்னியின் மனைவி யூலியா நவல்னயாவை அழைத்து மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் பேசவைத்தனர்.

சிறையில் மரணமடைந்த நவால்னியை அரசே அடக்கம் செய்யப் போவதாக வெளியான தகவலுக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது. ஆனால் நவால்னியின் தாயாரிடம் உடல் ஒப்படைக்கப்பட்டு, மார்ச் ஒன்றாம் தேதி அடக்கம் செய்யப்பட்டது. நவால்னியை ஜனநாயகத்தின் காவலர் என மேற்கத்திய ஊடகங்கள் புகழ் மாலை சூட்டின. அதிபர் புட்டினை கொலையாளி என்றும் சாடின.

நவால்னி ரஷ்ய அரசியல் அமைப்பின் "ஜனநாயகப்" பிரதிநிதியா?

சமூக ஊடகங்கள் மூலம் பிரபலம் அடைந்தவர் நவால்னி. யூடியூப்பில் 60 லட்சத்துக்கும் மேற்பட்டோரும், டுவிட்டர் எனப்படும் எக்ஸ் தளத்தில் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோரும் அவரை பின்தொடர்கின்றனர். அவர் பதிவிட்ட காணொளிகளை பல லட்சம் பேர் சாதாரணமாகப் பார்த்தனர்.

சமூக ஊடகப் பிரபலமான அவர், ரஷ்யாவில் மேற்கத்திய சார்பை வலியுறுத்தும் யப்லோகோ (Yabloko) கட்சியில் 2000 ஆம் ஆண்டில் சேர்ந்தார். 'ரஷ்யாவின் விடுதலைக்கான தேசிய இயக்கம்' என்ற அமைப்பை 2007 ஆம் ஆண்டு நிறுவினார். புலம்பெயர்ந்தோர் எதிர்ப்பே அதன் கொள்கை. மத்திய ஆசியா மற்றும் காகசஸ் மக்கள் மீதான இனவெறிக் கொலைகளை ஆதரித்த நவால்னி, அவர்களை "கரப்பான் பூச்சிகள்" என்று வர்ணித்தார். அவருடைய இந்த பேரினவாதக் கொள்கைகள் மேற்கு நாடுகளில் இயங்கும் மனித உரிமை அமைப்புகளின் கடும் கண்டனங்களுக்கு உள்ளாயின. சர்வதேச மன்னிப்பு சபை அவரை நீக்கியது.

இதனால் நெருக்கடிக்கு உள்ளான நவால்னி, புட்டின் எதிர்ப்பை கையில் எடுத்தார். அரசு நிர்வாகத்தில் நடக்கும் ஊழல்களைப் பேச ஆரம்பித்தார். இதற்கு சமூக ஊடக செல்வாக்கு பெரும் உதவி செய்தது. மேற்கு நாடுகளும் "ஊழல் எதிர்ப்பு" பேசும் தீவிர வலதுசாரியான நவால்னியை அடையாளம் கண்டுகொண்டன. அவர் புகழ்பாடின. சிறையில் நவால்னி மரணம் அடைந்தவுடன், அதனை ரஷ்ய எதிர்ப்பாக அமெரிக்காவும் மேற்கு ஊடகங்களும் கட்டமைத்தன.

அரசு நிர்வாகம் வெளிப்படையாக இயங்குவதற்காக செயல்பட்டு வந்த ஜூலியன் அசாஞ்சேயை அமெரிக்கா படுத்தும்பாடு சொல்லில் மாளாது. அவரது உயிர் எப்பொழுதும் பறிக்கப்படலாம். குவாண்டனாமோ சிறையில் எத்தனை பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாலஸ்தீனம் மீதான இஸ்ரேல் – அமெரிக்க தாக்குதலில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் செத்து மடிந்துள்ளனர். இப்படி ரத்தக்கறை படிந்த அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள்தான் நவால்னியை முன்வைத்து ஜனநாயகப் பாடம் எடுக்கின்றன.

## பூஜைகள் வேண்டாம்

நீதிமன்ற விழாக்களில் பூஜைகளும், அர்ச்சனைகளும் செய்வதை விட்டுவிட்டு, அரசியல் சாசனத்தை வைத்து வணங்க வேண்டும்

– உச்சநீதிமன்ற நீதிபதி
**அபய் எஸ்.ஓகா**

### நேருவா? மோடியா!

டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை மோடியை புகழ்ந்து ஒரு கட்டுரை வெளியிட்டு இருக்கிறது.

மோடி அரசு நிர்வாகப் பதவிகளில் 7898 நாள் இருந்து விட்டாராம். நேரு கூட 6130 நாள் தான் பிரதமராக இருந்தாராம். அதிக காலம் நிர்வாகத்தில் இருந்தவர் மோடி என்கிறது கட்டுரை.

நவீன இந்தியாவின் சிற்பியான ஜவகர்லால் நேரு 6130 நாள் பிரதமராக இருந்திருக்கிறார். அந்த சாதனையை முறியடிக்க வேண்டுமானால் மோடி 2037 மார்ச் மாதம் வரை தொடர்ந்து பிரதமராக இருந்தாக வேண்டும்.

பிறகு எப்படி இந்த கணக்கு என்றால், அவர் 4637 நாட்கள் குஜராத் முதல்வராக இருந்ததையும் சேர்த்துக் கொள்கிறார்களாம். அது போதாது என, ஜவஹர்லால் நேரு முதலமைச்சராக இருந்ததில்லை என்று நக்கல் வேறு.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை அறிவியலில் ஹானர்ஸ் பட்டம் படித்தவர் நேரு. 1912 முதல் 47 வரை விடுதலைப் போராட்டத்தில் 35 ஆண்டு காலம் இயங்கி உள்ளார். இதில் எட்டு ஆண்டுகளுக்கு மேல் அதாவது 3052 நாட்கள் சிறைவாசம்.

இதையெல்லாம் எந்த கணக்கில் எழுதப் போகிறது டைம்ஸ் ஆப் இந்தியா.

### கார்ப்பரேட் வரி குறைப்பு!

இந்து தமிழ் திசை தன் பங்குக்கு மோடியின் சாதனைகளை பட்டியலிட்டு இருக்கிறது.

கொஞ்சம் நெருங்கி படித்தால் அது சாதனையா வேதனையா என்று தெரியும்.

அவர் செய்த முதலாவது சாதனை மற்ற முதலாளித்துவ நாடுகளுக்கு இணையாக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 25 சதவீதத்திற்கும் குறைவாக அறிவித்தது தான் வரிதானாம்.

கார்ப்பரேட் வரி 32% வரை இருந்தது. இப்போது அது 22 சதமாக குறைக்கப்பட்டு விட்டது. 1% என்பது 50 ஆயிரம் கோடி ரூபாயை விட அதிகம். இதைத்தான் சாதனை என்கிறது இந்து தமிழ் திசை.

### சுங்கச்சாவடி பிரதமர்

மோடியின் அடுத்த சாதனை தேசிய நெடுஞ்சாலை பிராடு பேண்ட் இணைய தள அமைப்பு, ரயில் பாதை மின்மயம் ஆகியவற்றில் அதிக முதலீடுகள் செய்ததாம்!

தேசிய நெடுஞ்சாலைக்கு முதலிடம் மக்கள் பணத்தில் இருந்து ஒன்றிய அரசு செய்யும். ஆனால் தனியார்கள் சுங்கச்சாவடி அமைத்து பல கோடி கணக்கான ரூபாயை வசூல் செய்து குவிக்கிறார்கள்.

## சாதனை அல்




### அம்பானிக்கு அள்ளிக் கொடு!

இணையதள சேவையை மோடி அரசு வழங்கும். பொதுத்துறை நிறுவனமான பிஎஸ்என்எல்லுக்கு இன்னும் 4ஜி கூட தரப்படவில்லை. அதன் கழுத்தை நெரித்து சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்

## சட்ட அரங்கில் ஃபாலி நாரிமனுக்கு மரணமில்லை



அரசியல் சாசன வல்லுநரும், உச்ச நீதிமன்றத்தின் புகழ்பெற்ற வழக்கறிஞரும், இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான ஃபாலி நாரிமன் பிப்ரவரி 21 அன்று டெல்லியில் காலமானார்.

அவர் பத்மபூஷன், பத்மவிபூஷன் பட்டங்களைப் பெற்றவர். 1999 இல் இருந்து 2005 வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றி இருக்கிறார்.

அவர் தூங்கப் போகும் முன்பு கூட எழுதிக் கொண்டிருந்தார். அவருக்கு உடல் நலக் குறைவு எதுவும் இல்லை. தூக்கத்திலேயே காலை 1:15 மணி அளவில் அவர் உயிர் பிரிந்தது. உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ரோஹிண்டன் நாரிமன் அவரது மகனாவார்.

1929 பிறந்த நாரிமன், மும்பை அரசு சட்டக் கல்லூரியில் பயின்றார். இந்திய அரசியல் சாசனம் எழுதப்பட்ட 1949 இல் அவர் வழக்கறிஞராக பணியைத் தொடங்கினார். அவரது கடைசி மூச்சு வரை அரசியல் சாசனத்தில் நுணுக்கங்களை எல்லாம் வெளிக்கொண்டுவரும் பெருமிதப் படைத்தக்க பணியை ஆற்றி இருக்கிறார்.

எப்போதும் சமத்துவத்தையும் மதச்சார்பின்மையும் உயர்த்திப் பிடித்தவர். "நான் மதச்சார்பின்மை மலர்ந்து நின்ற இந்தியாவில் வாழ்ந்தேன். கடவுள் விரும்பினால், மதச்சார்பற்ற இந்தியாவிலேயே நான் சாக விரும்புகிறேன்" என்று 2010 இல் அவர் எழுதிய 'நினைவுகள் மங்கத்தொடங்கும் போது" என்ற சுயசரிதை நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் கடைசியாக எழுதிய புத்தகம் "உங்கள் அரசியல் சாசனத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்" 2021 என்பதாகும். அதில் இந்திய அரசியல் சாசனத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டியது தேவையை வலியுறுத்தி இருக்கிறார்.

அரசியல் சாசனம் தான் இந்த நாட்டை இந்தியாவை ஒரே நாடாக வைத்திருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இல்லையென்றால் மத்திய கால இந்தியா போல துண்டுகளாய் நாம் உடைந்து போய் இருப்போம் என்று போர்ப்ஸ் இந்தியா இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் சட்ட அரங்குகளில், குறிப்பாக அரசியல் சாசன களத்தில், பாலி நாரிமன், மரணமே இன்றி எடுத்து நிலைத்து வாழ்வார்.

## இதைச் செய்ய அரை மணி நேரமாகும்

**அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின்(AIBEA) பொதுச்செயலாளர் தோழர்.சி.எச்.வெங்கடாசலம் கூறுகிறார்:**

*மொத்த தேர்தல் பத்திரங்கள் 23,000 தான்..!

*இதை கையாண்டது வெறும் 29 கிளைகள் தான்..!

* இதுவும் நாள்தோறும் வழங்கப்படவில்லை;

குறிப்பிட்ட மாதங்களில்குறிப்பிட்ட நாட்களில் தான் பத்திர விநியோகம் நடந்துள்ளது..!

*இந்த விவரங்கள் ஏற்கனவே தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டவைதான்..

*இதை கூட்டிச் சொல்ல அரை மணி நேரமே ஆகும்..!

STATE FRAUD BANK OF INDIA(SFBI)..தானே?



# ல, வேதனை!



அம்பானியின் ஜியோவிற்கு 5ஜி தரப்பட்டுள்ளது.

### ரயில், பலன் யாருக்கு?

மக்கள் வரிப்பணத்தில் மோடி அரசு ரயில் பாதைகளை மின்மயமாக்குகிறது. ஆனால் ரயில் நிலையங்களையும் ஏன் ரயில்களை கூட தனியாருக்கு தருவார்கள். மூத்த குடிமக்கள், குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கட்டண சலுகையும் பறிக்கப்பட்டு விட்டது.

ரயிலில் ஏறத்தாழ சரி பாதி பெட்டிகள், ஏசி கோச்சுகளாக மாற்றப்பட்டுவிட்டன. முன்பதிவு இல்லாத அன் ரிசர்வ்டு பெட்டிகள் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்பட்டு விட்டது. காசு இருந்தால் சொகுசு பயணம். அது இல்லை என்றால் புளி மூட்டைகளாக பிதுங்கி சாகுங்கள், என்பதே மோடியின் புதிய ரயில்.

### ஜிஎஸ்டி யாருக்கு நன்மை?

மத்திய மாநில அரசியல் 12க்கு மேற்பட்ட இனங்களில் தனித்தனியாக வரி விதித்ததை மாற்றி ஜிஎஸ்டி ஒரே ஒரு நடைமுறைப்படுத்தப்பட்டதும் இந்து தமிழ் திசைக்கு, மோடியின் சாதனையாம். உலகின் எந்த நாட்டிலும் இல்லாத 28 சதவீத வரி வசூலிக்கப்படுகிறது. வரித்தொகை மொத்தமாக ஒன்றிய அரசுக்கு சென்று விடுகிறது. தென்மாநிலங்களில் இருந்து வசூலித்த வரியை வடமாநிலங்களுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். குறைவாக கிள்ளி கொடுக்கும் தொகையை தன் குடும்ப சொத்தைக் கொடுத்ததை போல பேசுகிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.


ஜி எஸ் டி வரி மூலம் வசூலிக்கப்படும் தொகை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து கொண்டே போகிறது. வரி வருவாய் தொகையில் 67% சாமானிய மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. இந்தியாவின் பெரும் பணக்காரர்களான 10% பேர் 3% வரியாக செலுத்துகிறார்கள். பெரும் பணக்காரர்களுக்கும் கார்ப்பரேட்டுகளுக்கும் சலுகைகள் வந்து, சாதாரண மக்கள் தலையில் பெரும் தொகையை வழியாக சுமத்தியது தான் மோடியின் சாதனையாம்!

### 5 ம் இடமல்ல; 120ம் இடம்!

உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவை ஐந்தாவது இடத்திற்கு கொண்டு சென்றிருப்பது மோடியின் சாதனையாம். உற்பத்தி குறியீட்டு எண்ணில், ஐந்தாவது இடத்திற்கு இந்தியா வந்திருப்பது சரி. ஆனால் அந்த உற்பத்தியின் காரணமாக உருவான செல்வம் யாருக்கு சென்று சேர்ந்தது என்பதே கேள்வி. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி குறியீட்டு எண் 5 என்ற இடத்திற்கு சென்று இருப்பதை மோடியிலிருந்து இந்து தமிழ் திசை வரை அனைவரும் பேசுகிறார்கள். ஆனால் தனிநபர் வருவாயில், உலகப் பட்டியலில் இந்தியா 120 வது இடத்தில் இருக்கிறது. சின்னஞ்சிறிய நாடுகள், ஏழை நாடுகளை விட இந்தியா மிகவும் பின்தங்கி இருக்கிறது. இதனால்தான் உலக பட்டினி குறியீட்டில் கடும் பட்டினியில் கிடக்கும் 15 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. இதற்குப் பெயர் சாதனையா?

**- டி.எம்.மூர்த்தி**

## சுருக்.. நறுக்..




“தேர்தல் பத்திரம் பற்றிய விவரங்களை தாக்கல் செய்ய அவகாசம் கேட்பது 'நொண்டிச் சாக்கு'. இந்திய அரசாங்கம் சொந்த மனுவை தாக்கல் செய்ய வேண்டும். ஸ்டேட் வங்கி இந்த தகவலை வழங்க 10 நிமிடங்கள் கூட தேவையில்லை”.

**சுபாஷ் கார்க்**
முன்னாள் நிதித்துறை செயலாளர்

### சாய்பாபா விடுதலை!



“டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் ஜி.என்.சாய்பாபா, மும்பை உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. 90% ஊனமுற்ற அந்த கல்வியாளர், மனிதாபிமானமற்ற சூழலில் நீண்ட காலம் அவதிப்பட்டார். இது நீதித்துறையின் செயல் திறனின் முன்பு ஒரு கேள்வியாகவே இருந்தது. கொடூரமான சட்டங்கள் மற்றும் ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளால் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கும் விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறோம்.

**டி.ராஜா**
பொதுச்செயலாளர், சிபிஐ

### மோடியின் ஜோக்



“பிரதமருக்கு நகைச்சுவையாக பேசுவது எப்படி என்று தெரிந்திருக்கிறது. கேரளாவில், பிஜேபி இரட்டை இலக்கங்களில் வெல்லும் என்று அவர் சொன்னதைக் கேட்டு யாரும் சிரிப்பார்கள். இதுவும் அவருடைய புதிய 'குவாரண்டி' தான். ஏற்கனவே அவர் தந்த ஏராளமான 'குவாரண்டி'கள், நெடுஞ்சாலையில் அனாதைகள் போலக் கிடக்கின்றன”.

**பினாய் விஸ்வம் எம்பி**
கேரள மாநிலச் செயலாளர், சிபிஐ

### ரூபாய் ஏன் விழுகிறது?

“பதில் தெரியாத கேள்வி? இந்தியப் பொருளாதாரம் மிக நன்றாக இருக்கிறது என்றால், ஏன் ரூபாயின் மதிப்பு தொடர்ச்சியாக விழுந்து கொண்டே போகிறது”.

### குட்டியைத் துரத்திய தாய்!

“சாமியார் ராம்தேவின், 'பதஞ்சலி' தயாரித்த கரோனில் மருந்தை விளம்பரப்படுத்தியவர் சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷவர்தன். பதஞ்சலியின் தவறான செயல்களை கண்டுகொள்ளாததோடு, அவற்றுக்கு அரசாங்கம் துணையாகவும் நின்றது தவறு என உச்சநீதிமன்றம் கண்டித்துள்ளது. மோடி அரசின் இந்த கேடுகளை சுகாதார அமைச்சர் தலையில் போட்டுவிட்டு தப்பிப்பதற்காகத் தான், இப்போது ஹர்ஷவர்தனுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**டாக்டர் பாலச்சந்திர காங்கோ**
தேசியச்செயலாளர், சிபிஐ

### டிஜிட்டல் அவமானம்!

“பிரதமர் மோடி அவர்களை அவமானப்படுத்திய தற்காகஸ்டேட் வங்கியின் தலைவரும் இயக்குநர்களும் தண்டிக்கப்பட வேண்டும். இந்தியாவை மோடி டிஜிட்டல் இந்தியாவாக மாற்றி வெகுகாலமாகிவிட்டதே! தட்டிய நொடியில் தெரிந்து கொள்ளும் டிஜிட்டல் தொழில்நுட்பம் இருக்கும்போது, தேர்தல் பத்திரத் தகவல்களை தாக்கல் செய்ய நான்கு மாதம் அவகாசம் கேட்டு பிரதமர் மோடியை அவமதிக்கலாமா?”

**மிலிண்ட் ரானடே, ஏஐடியுசி**

## மக்கள் ஒற்றுமைக்கு நெருப்பு வைக்கும் பா.ஜ.க வின் வெறுப்பு பேச்சு!

2023 ஆம் ஆண்டில், முஸ்லிம்களை குறிவைத்த 668 ஆவணப்படுத்தப்பட்ட வெறுப்பூட்டும் பேச்சு நிகழ்வுகளை இந்தியா பதிவு செய்துள்ளது, இந்தியாவின் மத சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு பேச்சுகளை ஆவணப்படுத்தும் வாஷிங்டன் டிசியை தளமாகக் கொண்ட 'இந்தியா ஹேட் லேப்' வெளியிட்ட அறிக்கையின்படி. 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 255 நிகழ்வுகள் நடந்தாலும், “இந்தியாவில் வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள்” என்ற தலைப்பில் அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது, “இந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் 413 ஆக உயர்ந்துள்ளது, இது 62% அதிகரித்துள்ளது”.

75% நிகழ்வுகள் (498) பாஜக ஆளும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் (பிஜேபி தலைமையிலான மத்திய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுகின்றன), மற்றும் டெல்லி (காவல்துறை மற்றும் பொது ஒழுங்கு அமைப்பு ஆகியவை மத்திய அரசின் வரம்புக்கு உட்பட்டவை) ஆகியவற்றில் நடைபெற்றன. 36% (239) நிகழ்வுகள் “முஸ்லிம்களுக்கு எதிரான நேரடி வன்முறை அழைப்பை உள்ளடக்கியது”, 63% (420) “சதி கோட்பாடுகள், முதன்மையாக லவ் ஜிஹாத், லேண்ட் ஜிஹாத், ஹலால் ஜிஹாத் மற்றும் மக்கள்தொகை ஜிஹாத்” பற்றிய குறிப்புகளை உள்ளடக்கியது. சுமார் 25% (169) பேர் முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களைக் குறிவைக்கும் பேச்சுக்களைக் கொண்டிருந்தனர்.

இத்தகைய வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளின் பின்னணியில் உள்ள அமைப்புகளைப் பொறுத்தவரை, ஆவணப்படுத்தப்பட்டவைகளில் 32% (126) விஷ்வ ஹிந்து பரிஷத் (VHP) மற்றும் பஜ்ரங்தளம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டவை. “பெரும்பாலும் தேர்தல் பேரணிகளின் பின்னணியில் சுமார் 50 வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளை ஏற்பாடு செய்ததற்கு பாஜகவே காரணமாக இருந்தது” என்று அறிக்கை கூறுகிறது. ஒட்டுமொத்தமாக, சங்பரிவாருடன் தொடர்புடைய அமைப்புகள் “307 நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்தன, 2023 இல் நடந்த அனைத்து வெறுப்புப் பேச்சு நிகழ்வுகளில் 46% ஆகும்”. “பசு பாதுகாப்புக்காக வெளிப்படையாக அர்ப்பணிக்கப்பட்ட அமைப்புகள், கௌ ரக்ஷா தளம் போன்றவை, தொடர்ந்து வெறுப்பூட்டும் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றன என்று சமீபத்திய போக்கையும் அறிக்கை கோடிட்டது.

## ஜனசக்தி கட்டுரை ஆசிரியர்கள் கூட்டம்




ஜனசக்தி வடிவமைப்பு மாற்றங்கள், சமூக ஊடக செயல்பாடுகளை அதிகரித்தல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விவாதிக்க, 2.3.2024ல் ஏஐடியூசியின் 'கேடிகே தங்கமணி இல்லத்'தில் அலுவலகத்தில் ஆர்.கே. தலைமையில் கட்டுரை ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது. ஜனசக்தி ஆசிரியர் டி.எம்.மூர்த்தி, ஆசிரியர்குழு உறுப்பினர்கள் இளசை எஸ் கணேசன், மணிமாறன், டி.லெனின், என்சிபிஎச் மேலாண் இயக்குனர் க.சந்தானம் உள்ளிட்டு 23 எழுத்துக் கொடையாளர்கள் பங்கேற்று விவாதித்தனர்.

## நாடாளுமன்றத்தில் பேச லஞ்சம் வாங்கினால்
# தேர்தலில் போட்டியிடத் தடை
### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஊழல் மற்றும் லஞ்சம் தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ள வேண்டும் என உச்சநீதிமன்றம் இன்று வழங்கிய ஒருமித்த தீர்ப்பை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா வரவேற்றுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: உச்சநீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகளை கொண்ட அமர்வு, பி.வி.நரசிம்மராவ் எதிர் மத்திய புலனாய்வுத்துறை வழக்கில், 1998ல் வழங்கிய தீர்ப்பில், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசாரணையிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, இன்று பழைய தீர்ப்பை ரத்து செய்துள்ளது. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் லஞ்சம் வாங்கிய வழக்கில் பழைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு, அந்த எம்பிக்கள் மீது வழக்குத் தொடர முடியாது என பாதுகாப்பளித்தது. ஆனால், தற்போதைய தீர்ப்பு, நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது லஞ்சம் வாங்குவது, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் செயல்பாட்டையே பாதிக்கும் என்று திட்டவட்டமாக கூறியுள்ளது.

இந்திய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, எம்.எம்.சுந்தரேஷ், பி.எஸ்.நரசிம்மா, ஜே.பி.பார்த்திவாலா, சஞ்சய்குமார் மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகிய ஏழு பேர் கொண்ட அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.


இந்த தீர்ப்பை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என டாக்டர் நாராயணா கோரிக்கை விடுத்துள்ளார். நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளும் நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக முடிக்கப்பட வேண்டும். "தாமதமாகும் நீதி மறுக்கப்பட்ட நீதி" என்ற கோட்பாடு நீதித்துறையில் உள்ளது. நிலுவையில் உள்ள வழக்குகளின் விசாரணைகள் விரைவுபடுத்தப்படாவிட்டால், பல ஆண்டுகள் வாய்தா வாங்கியே நீட்டித்து விடுவார்கள்.

எனவே இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி இருப்பவர்களை, எதிர்வரும் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும். அவர்கள் போட்டியிட அனுமதிக்கப்பட்டால், இந்தத் தீர்ப்பின் நோக்கம் தோற்கடிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் பேசுவதற்காகவோ அல்லது வாக்களிப்பதற்காகவோ லஞ்சம் வாங்குவது அப்பட்டமான குற்றமாகும்.

இவ்வாறு லஞ்சம் பெறுபவர்கள், கொடுப்பவர்களை எந்த விசாரணையும் தண்டனையும் தப்பித்துக் கொள்ள அனுமதித்தால், அது நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் அரசியல் சாசனத்தில் அடிப்படைகளையும் தகர்த்து விடும் என்று டாக்டர் கே. நாராயணா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# உச்சநீதிமன்றத் தீர்ப்பு
## சுயநலவாதிகளுக்கு எச்சரிக்கை



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாநிலங்களவைத் தேர்தலில் பணம் பெற்று வாக்களித்தது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியுள்ளது. சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் மக்கள் பிரதிநிதிகளாக செயல்படும் உறுப்பினர்கள் கேள்வி கேட்கவோ, பேசவோ அல்லது வாக்களிக்கவோ, பணம் பெற்றுக் கொண்டு செயல்பட்டால் அது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய தண்டனைக்குரிய குற்றச் செயல் என தீர்ப்பளித்துள்ளது.

1993 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் பி.வி.நரசிம்மராவ் தலைமையிலான ஆட்சி நம்பிக்கை வாக்கெடுப்புக்கு சென்ற போது, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா உறுப்பினர்கள் லஞ்சம் பெற்று வாக்களித்தார்கள் என்ற புகார் எழுந்தது. இது தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பு ஊழலை கட்டுப்படுத்தும் உறுதி வாய்ந்ததாக அமையவில்லை என்பதால், அந்த தீர்ப்பை தற்போதைய தலைமை நீதிபதி உள்ளிட்ட ஏழு நீதிபதிகள் அடங்கிய அமர்வு ஒரு மனதாக ரத்து செய்து, பொது வாழ்வில் ஊழலை தடுக்கும் வகையில் நல்ல தீர்ப்பு வழங்கியுள்ளது.

சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் ஊழல் முறைகேடுகளில் ஈடுபடுவது மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி முறை ஜனநாயகத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும் என்று உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. பொதுவாழ்வு கரைபட்டும், சீரழிந்தும் வரும் சூழலில் வழங்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பு ஊழலை எதிர்த்து போராடி வருவோருக்கு ஊக்கமூட்டக் கூடியது. ஊழல்வாதிகளுக்கும், சுயநல ஆதாயம் தேடும் மலிவான மனிதர்களுக்கும் எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டி வரவேற்கிறது என கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# ஸ்டெர்லைட் ஆலை மூடல் உத்தரவு : உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு வரவேற்பு




ஸ்டெர்லைட் ஆலை மூடல் உத்தரவை உறுதி செய்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது. இது தொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி நகரில் இயங்கி வந்த வேதாந்தா குழுமத்தின் ஸ்டெர்லைட் ஆலை சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை பின்பற்றவில்லை. இதனால் அப்பகுதி மக்களின் நல்வாழ்வு கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தது. இதற்கு எதிராக அப்பகுதி மக்கள் போராடி வந்தனர். கடந்த 2018 ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் ஆலையின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வலியுறுத்தி பொது மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட போது, காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர். இந்த அசாதாரண சூழலைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு ஸ்டெர்லைட் ஆலையை மூட உத்தரவிட்டது.

இதனை எதிர்த்து ஆலை நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தது. சென்னை உயர்நீதிமன்றம் ஆலையின் கோரிக்கையை நிராகரித்தது. இதனையடுத்து, உச்சநீதிமன்றத்தில் ஆலை நிர்வாகம் மேல் முறையீடு செய்தது. அதனை விசாரித்த உச்சநீதிமன்றம் ஆலை நிர்வாகத்தின் அத்துமீறலை பட்டியலிட்டு, அது சட்டம், விதிமுறைகள், பொது ஒழுங்குமுறை எது பற்றியும் கவலைப்படாமல் செயல்பட்டதை சுட்டிக்காட்டி, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வேண்டும் என்ற உயர்நீதிமன்ற உத்தரவை உறுதி செய்து, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அலட்சியப் போக்கையும் விமர்சித்துள்ளது.

பொதுமக்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளித்து, உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி, வரவேற்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# அணுக்கழிவு குப்பைத் தொட்டியா தமிழ்நாடு?
### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காட்டம்

கல்பாக்கத்தில் ஈனுலை இயக்கத்தை தொடக்கி வைப்பது தமிழ்நாட்டை அணுக்கழிவுக் குப்பைத் தொட்டியாக்கும் முயற்சி என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கல்பாக்கம் அணுமின் நிலைய வளாகத்தில் பாவினி நிறுவனம் 500 மெகாவாட் திறன் கொண்ட ஈனுலைக்கு எரிபொருள் நிரம்பும் திட்டத்தை பிரதமர் இன்று (04.03.2024) தொடக்கி வைக்கிறார். இந்த அணு மின் உற்பத்தியால் இப்பகுதியின் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதால் ஈனுலைத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என பொதுமக்களும், வல்லுநர்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கனவே கூடங்குளம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அணுமின் உற்பத்தி திட்டத்தால் ஏற்படும் பேரழிவுகளைத் தடுக்கப் போராடி வரும் நிலையில், கல்பாக்கத்தில் ஈனுலை இயக்கத்தை தொடக்கி வைப்பது தமிழ்நாட்டை அணுக்கழிவுக் குப்பைத் தொட்டியாக்கும் முயற்சியாகும்.

அண்மையில் இயற்கைப் பேரிடர் பாதிப்புகளை தொடர்ந்து இருமுறை சந்தித்த தமிழ்நாட்டுக்கு பேரிடர் நிதி வழங்க முன்வராத ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலில் பாதிப்பை ஏற்படுத்தும் ஈனுலை இயக்கத்தை தொடங்குவது மக்கள் நலனுக்கு எதிரானது என்பதால் அத்திட்டத்தை கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்றும் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# மார்ச் 12. மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்

# தமிழ்நாடு ஆட்டோ சம்மேளன மாநாடு அறைகூவல்




## மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

- ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள புதிய மோட்டார் வாகன சட்டத்தை திரும்பப் பெறு,
- ஆட்டோ மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு அபரிமிதமாக உயர்த்தப்பட்ட சாலை வரியை திரும்பப் பெறு,
- தமிழ்நாடு அரசு ஆட்டோ செயலியை உடனே துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,
- நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட ஆட்டோ தொழிலாளர்களுக்கு வீடு அல்லது வீட்டு மனை வீடு கட்ட 4 லட்சம் மானியம் வழங்க வேண்டும்,
- ஆட்டோ மற்றும்மோட்டார் தொழிலாளர்களுக்கு வரியில்லாமல் மானிய விலையில் பெட்ரோல், கேஸ், டீசல் வழங்க வேண்டும்,
- நலவாரியத்தின் மூலம் இ எஸ் ஐ, பி எப், மருத்துவ காப்பீடு வழங்க வேண்டும்,
- அநியாய ஆன்லைன் அபராதத்தை உடனே கைவிடு,
- 60 வயது முடிந்த வாகன ஓட்டுனர்களுக்கு ரூ.6000 ஓய்வூதியம் வழங்கு, பண்டிகை காலங்களில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூபாய் 5000 போனஸ் வழங்கு,
- ஓட்டுனர்களை கொலை குற்றவாளியாக மாற்றும் பாரதிய நியாய சஞ்சிதா (TNS 106 – 2) சட்டத்தை உடனடியாக திரும்ப பெறு,
- 10 வருட சிறை, 7 லட்சம் அபராதம் விதிக்கும் சட்டத்தை ரத்து செய்

உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

தமிழ்நாடு ஆட்டோ சம்மேளனத்தின் 2 வது மாநில மாநாடு 02.03.2024 அன்று மதுரை ஒத்தக்கடையில் நடைபெற்றது. மாநாட்டு தலைமை குழுவாக மதுரை அலாவுதீன், சேலம் முருகன், செங்கல்பட்டு ஜெகதீசன் ஆகியோர் செயல்பட்டனர்.

மாநாட்டு கொடியை ஏ ஐ டி யு சி யின் மூத்த தலைவர் தினகர மோகன் ஏற்றி வைத்தார். மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் பா.காளிதாஸ் வரவேற்பு உரையாற்றினார். வரவேற்பு குழு செயலாளர் சித்திக் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

மாநாட்டை துவக்கி வைத்து தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் ம. ராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். ஆட்டோ சம்மேளன பொதுச் செயலாளர் ப.மாரியப்பன் வேலை அறிக்கையை முன்வைத்து பேசினார்.

**மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள்**



மாநிலத் தலைவர் **காசி விஸ்வநாதன்**, பொதுச் செயலாளர் **ப.மாரியப்பன்**, பொருளாளராக **ஏ.இம்தியாஸ் பாட்ஷா**, துணைத் தலைவர்களாக 9 பேர், துணைச் செயலாளர்களாக 9 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டை வாழ்த்தி மதுரை மாவட்ட ஏ ஐ டி யு சி பொதுச் செயலாளர் சேது, மாநகர மாவட்ட சிபிஐ செயலாளர் எம்.எஸ். முருகன், புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், மாதர் சங்க மாநிலத் துணைச் செயலாளர் ராஜலட்சுமி ஆகியோர் பேசினர். தமிழ்நாடு ஏஐடியுசி மாநிலத் தலைவர் எஸ்.காசி விசுவநாதன் நிறைவுரை ஆற்றினார்.

ஆட்டோ சம்மேளன பெயரை தமிழ்நாடு ஆட்டோமற்றும்போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஓட்டுநர்களை கொலை குற்றவாளியாக்கும் பாரதிய நியாய சஞ்சிதா சட்டத்தை ரத்து செய் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 12, மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

### பாலாறு குறுக்கே மீண்டும் தடுப்பணைகள்

## பாழாகும் தமிழக பாலாறு



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி கொடுத்துள்ள அறிக்கை.

ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி அவர்கள் மீண்டும் பாலாற்றின் குறுக்கேரெட்டிபாபாளையம் என்ற இடத்தில் மூன்று தடுப்பணைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ததுடன், அடிக்கலும் நாட்டியுள்ளார்.

ரூ.535 கோடியில் 5000 ஏக்கர் பயன்பெறும் வகையில் நாட்டியதுடன், மேலும் ரூ.215 கோடி செலவில் 0.6 டி.எம்.சி, கொள்ளளவு கொண்ட அணை கட்டுமானம் ஒன்றும் விரைவில் தொடங்கப்படும் என்று கூறியுள்ளார். ஆக மூன்று அணைகள் இப்பகுதி வேளாண் வளர்ச்சிக்கு புதியதாக கட்டப்படும் என்று மேடையில் அறிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர் களும் கடந்த காலங்களில் தடுப்பணைகளை கட்டி முடித்துள்ளார். மைசூர் சமஸ்தானம் மற்றும் சென்னை மாகாணத்திற்குமான ஒப்பந்தப்படியும், 1956 ஆம் ஆண்டு பன்மாநிலநதிநீர் உடன்பாட்டின் படியும் பாலாறு பாசனம் நமக்கான அடிப்படை உரிமையாகும்.

சர்வதேச நதிநீர் கோட்பாட்டின்படி கடைமடை பாசனத்திற்குத்தான் முன்னுரிமை உடையதாகும். இதை எதையும் மதிக்காது குறுகிய அரசியல் பதவி வேட்கையில் தொடர்ந்து ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகளை கட்டுவதும், பின் இதனை உயர்த்தி கட்டுமாணம் செய்வதும் ஆளும் ஆந்திரா மாநில அரசால் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

இப்படி 22 தடுப்பணைகள் இதுவரை கட்டப்பட்டுள்ளன. இதன் மீது ஆட்சேபனை தெரிவித்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் இரு வழக்குகள் தாக்கல் செய்து விசாரணையில் உள்ள நிலையில், மீண்டும் தற்போதும் ஆந்திர முதல்வர் மீறி உள்ளார். சட்ட வழிமுறை மாண்புகளை காக்க வேண்டிய ஒன்றிய அரசும் வேடிக்கை பார்க்கிறது.


இந்திய இறையாண்மை, ஒருமைப்பாட்டை காத்திடுவேன், அரசியல் சட்டநெறி முறைகளின்படி நடப்பேன் என்று உறுதி அளித்து பொறுப்பேற்றுள்ள முதல் அமைச்சரே இப்படி மீறுவது தேசிய ஒருமைப்பாட்டுக்கு கேடு விளைவிப்பதாகும். இதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கண்டிப்பதுடன், உடனடியாக தமிழகத்தை பாதிக்கும் இந்த திட்டங்களை ஆந்திரா அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மேலும் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்ற விசாரணையில் உள்ள இந்த வழக்குகளை துரிதப்படுத்தி விசாரணைக்கு கொண்டுவர வேண்டும். மேலும் அறிவிக்கப்பட்டுள்ள புதிய தடுப்பனைகளுக்கு எதிராக தடை ஆணை பெற்றிட வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

### தேர்தல் பத்திரம் தொடர்பான விவரங்களை தாக்கல் செய்ய

## பிரதமர் மோடி இந்திய ஸ்டேட் வங்கிக்கு உத்திரவிட வேண்டும்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை**




இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே நாராயணா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

தேர்தல் பத்திரம் என்னும் பெயரில் பெயர் இல்லாமல் வழங்கப்பட்ட நன்கொடைகள் குறித்த அனைத்து விவரங்களையும் உடனடியாக சமர்ப்பிக்குமாறு இந்திய ஸ்டேட் வங்கிக்கு, ஒன்றிய அரசும் இந்திய ரிசர்வ் வங்கியும் உத்தரவிட வேண்டும் என்று டாக்டர் கே நாராயணா கேட்டுக் கொண்டுள்ளார். இந்திய அரசியல் சாசனத்தின் படி உருவாக்கப்பட்ட அமைப்பான ரிசர்வ் வங்கிக்கு, அதன் துணை நிறுவனமான இந்திய ஸ்டேட் வங்கியை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்த வேண்டும் என உத்தரவிட வேண்டிய பொறுப்புள்ளது.



மார்ச் 6 ஆம் தேதிக்குள் தரவுகளை சமர்ப்பிக்குமாறு எஸ்பிஐக்கு இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது, ஆனால் அது ஜூன் 30 ஆம் தேதி வரை கால அவகாசம் கோருகிறது. வங்கியில் அனைத்து பண பரிமாற்றங்களும் டிஜிட்டல் வழியாகவே நடைபெறுகின்றன. முன்பு போல் பதிவேடுகளில், கையால் எழுதப்படுவது இல்லை.

தேர்தல் பத்திர பண பரிமாற்றம் தொடர்பான விவரங்களை ஒரு நாளில் அல்ல; சில நிமிடங்களில் திறந்து பார்த்து விட முடியும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடியும் வரை, எந்தக் கட்சிக்கு எவ்வளவு நன்கொடை தேர்தல் பத்திரம் மூலம் வந்தது என்பதை, நாட்டுக்குத் தெரிவிக்காமலேயே மறைக்கும் முயற்சியே இது.

தேர்தல் பத்திரங்கள் மூலம் ஆளுங்கட்சியான பாஜக மொத்த தேர்தல் பத்திரங்களில் 55 சதவீதத்தை பெற்றுள்ளது. ரிசர்வ் வங்கியின் கவர்னர் குஜராத்தைச் சேர்ந்தவர். அவர் மோடி சொல்வதற்கெல்லாம் “ஆமாம் போடுபவர்” என்று நன்கு அறியப்பட்டவர்.

ரிசர்வ் வங்கியின் தலைவரின் அனுமதியின்றி, இந்திய ஸ்டேட் வங்கி கால அவகாசம் கோரி நீதித்துறையின் கதவுகளைத் தட்ட முடியுமா? இந்திய உச்ச நீதிமன்றம் முக்கிய தீர்ப்புகளை வழங்கினாலும், அரசியல் சாசன அமைப்புகள் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின் நோக்கத்தை நீர்த்துப்போகச் செய்யவே முயற்சிக்கின்றன.

எனவே, பிரதமர் நரேந்திர மோடி, நேரடியாகத் தலையிட்டு, தரவுகளை சமர்ப்பிப்பதில் கால அவகாசத்தை நீட்டிக்க கோரும் மனுவை திரும்பப் பெற இந்திய ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட வேண்டும். இல்லையெனில், பிரதமரின் மௌனம் காப்பதின் பொருள் என்ன என மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் கே.நாராயணா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி குடியிருப்போர் ஆர்ப்பாட்டம்




அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி, குடியிருப்புவாசிகள் கோவை செல்வபுரத்தில் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை மாநகரில் பல்வேறு பகுதிகளில் குடிசைகள் அமைத்து வசித்து வந்த ஏழை எளிய மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு, பல பகுதிகளில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகள் ஒதுக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதிதாக குடியமர்த்தப் பட்டவர்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் இல்லாத சூழ்நிலை நிலையில் பல்வேறு அடிப்படை வசதிகள் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், எக்ஸ்.எம். எல்.ஏ. தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சி.சிவசாமி சிறப்புரையாற்றினார். ஒன்றியச் செயலாளர் வழக்கறிஞர் ஜி.பி.சக்திவேல், பொருளாளர் கே.ஆர்.தங்கராஜ், மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கம் எழுப்பினர்.

## சரணாலய அறிவிப்பை திரும்பப்பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் செயலாளர் பி.ஜே. வெங்கடாசலம் தலைமையில், தாமரைக்கரையில் உள்ள பர்கூர் வனச் சரக அலவலகம் முன்பு பிப்ரவரி 27 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், பழங்குடி மக்களின் பாரம்பரிய வன உரிமைகளைப் பறிக்கும் வகையில், வனவிலங்குகள் மற்றும் புலிகள் காப்பகம் அறி வித்திருப்பதை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினர். சங்கத்தின் மாநில நிர்வாகி வி.பி.குணசேகரன், சட்ட ஆலோசகர் கிருஷ்ணகுமார், பி.ஜே.கணேசன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

## பள்ளிக்கல்வித்துறை தூய்மைப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற பெருந்திரள் ஆர்பாட்டத்திற்கு, ஏஐடியூசி பள்ளிக்கல்வி தூய்மை பணியாளர்கள் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் செல்வி தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன், வி.தொ.ச மாநிலச் செயலாளர் ஜெ.பிரதாபன், கே.மணி, சுதர்சனன், முருகேசன், மனோகரன், இரவிசந்திரன், மாதையன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். பள்ளிக்கல்வித்துறை தூய்மை பணியாளர்களின் கோரிக்கைகள் வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

## வினாடி – வினா விடைகள்

1. ஜோசப் விசாரியோனோவிச் ஸ்டாலின்
2. கலிலியோ
3. செங்குட்டுவன்
4. புராணம்
5. கார்பன் டை ஆக்சைடு
6. ஆக்சிஜனேற்றம்

## நூல் வெளியீட்டு விழா

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலப் பொருளாளர் வழக்கறிஞர் சுப்பிரமணியன் எழுதிய பில்கீஸ்பானு எனும் நூல் வெளியீட்டு விழா பிப்ரவரி 27 அன்று கோவை ஜீவா இல்லத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் வெளியிட, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன், கே.எம்.செல்வராஜ், சிவஞானம், ரவிக்குமார், சாந்தி சந்திரன் எம்.சி., எம்.பேபி, அ.அசரப் அலி உள்ளிட்டோர் பெற்றுக்கொண்டனர்.

## ரூ.2 ஆயிரம் ஜனசக்தி வளர்ச்சி நிதி



இராஜபாளையத்தில் ஏஐடியுசி அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தின் கிளைச் செயலாளரும், நடத்துநருமான ஜி.தர்மசாஸ்தாவுக்கு பணி ஓய்வு பாராட்டு விழா நடைபெற்றது. பாண்டியன் தலைமை தாங்க, தி.இராமசாமி முன்னாள் எம்.எல்,ஏ., வி.அழகிரிசாமி முன்னாள் எம்.பி., எஸ்.பழனிக்குமார் உள்ளிட்டோர் சால்வை அணிவித்து பாராட்டிப் பேசினர். அப்போது, ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கப்பட்டது.

## காஞ்சிபுரம் அருகே விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

காஞ்சிபுரம் அருகே புதுப்பாக்கம் ரயில்வே கேட் பகுதியில் விவசாயிகள் சங்க மாவட்டத் துணைச் செயலாளர் ஜே.வெங்கடேசன் தலைமையில் பிப்ரவரி 29 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. டெல்லியில் நடைபெறும் விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவாகவும் நெல் கொள்முதல் நிலையங்களில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க வலியுறுத்தியும் முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் வி.சரஸ்வதி, ஆர்.பூ.சாமி, எம்.நாகப்பன், வி.ரூபாவதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பட்டாசு தொழிலாளர்களிடம் சிபிஐ குழு கருத்துக்கேட்பு

சிவகாசி வெம்பக்கோட்டை பகுதிகளில் பட்டாசு விபத்தும், தொழிலாளர்கள் மரணமும் தொடர்கதையாக உள்ளது. இது தொடர்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைத்துள்ள குழு கள ஆய்வு மேற்கொண்டது. இந்தக் குழுவில் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி முன்னாள் எம்எல்ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னு பாண்டியன் முன்னாள் எம்எல்ஏ, ஏஐடியுசி தலைவர்கள் சமுத்திரம், நடராஜன், ஜீவா முனியசாமி, கலைவாசன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கள ஆய்வு மேற்கொண்ட போது, பட்டாசு ஆலைத் தொழிலாளர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துக் கூறினர். இதன் அடிப்படையிலான கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஆலங்குளத்தில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும் தீர்மானித்துள்ளனர்.

## எழுச்சியோடு தொடரும் இளைஞர்களின் மக்கள் சந்திப்பு இயக்கம்




வரலாறு காணாத வேலையின்மை,விலைவாசி உயர்வு, ஊழல்களுக்கு வித்திட்ட மோடி அரசை கண்டித்து “வெளியேற்றுவோம் பாஜகவை” எனும் முழக்கத்தோடு அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றுவருகிறது. பிப்ரவரி 25 துவங்கி நடைபெற்றும் மக்கள் சந்திப்பு இயக்கத்தில் கலந்துகொள்கிற இளைஞர்கள் பா.ஜ.க அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்புவதோடு மக்கள் கூடும் இடங்களில் நேரிடையாக சந்தித்து துண்டறிக்கைகளை அளித்து பா.ஜ.க அரசின் அவலங்களை எடுத்துரைத்து வருகின்றனர்.

**தென்சென்னை** மாவட்ட இளைஞர் பெருமன்றம் சார்பாக சென்னை எம்ஜிஆர் நகரில் நான்கு குழுக்களாகப் பிரிந்து பரப்புரையில் ஈடுபட்டனர். அந்தப் பகுதி மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர். மூத்த தோழர்கள் இலட்சுமணன், உசேன் இருவரும் இறுதிவரை கலந்துகொண்டனர். (படம்)

**கள்ளக்குறிச்சி** மற்றும் **திருப்பத்தூர்** மாவட்டங்களில் வேன்பிரச்சாரம் மூலம் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் க.பாரதி கலந்து கொண்டு உரையாற்றினார்.

**விழுப்புரம்** மாவட்டத்தில் நடைபெற்ற பிரச்சாரத்தில் தேசியக்குழு உறுப்பினர். இரா.அந்தோணி கலந்து கொண்டார்.

**மயிலாடுதுறையில்** மாவட்டச் செயலாளர் எம்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

**திருவள்ளூரில்** மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில் தலைமையில் நடைபெற்றது.

**மத்தியசென்னையில்** மாவட்டச் செயலாளர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

**கிருஷ்ணகிரியில்** மாவட்டச் செயலாளர் எஸ்.ஆதில் தலைமையில் நடைபெற்று வருகிறது.

**தென்காசியில்** மாவட்டச் செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது.

**கன்னியாகுமரி** மாவட்டச் செயலாளர் சஜீஸ் தலைமையில் நடைபெற்றது

**ஈரோடு** தெற்கு மாவட்டச் செயலாளர் பிரபு தலைமையில் நடைபெற்றது.

**ஈரோடு** வடக்கு மாவட்டசெயலாளர் சுரேஷ் தலைமையில் மக்கள் சந்திப்பு இயக்கம் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**திண்டுக்கல்லில்** மாவட்டத் துணைத் தலைவர் எம்.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது.

**புதுக்கோட்டையில்** மாநிலத் துணைத் தலைவர் கு.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

**திருப்பூர்** புறநகரில் மாவட்டச் செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி தலைமையில் நடைபெற்றது.

மக்கள் மத்தியில் துண்டறிக்கைகளை விநியோகிக்கும் போது மக்கள் மோடி ஆட்சிக்கு எதிரான கோபத்தை வெளிப்படையாக காட்டி மக்கள் சந்திப்பு இயக்கத்தில் பங்கேற்றுவரும் இளைஞர்களை பாராட்டிவருகின்றனர்.

## வடசென்னை ஏஐடியுசி பயிற்சி முகாம்

வடசென்னை, கண்ணதாசன் நகரில் ஏஐடியுசி மாவட்ட நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாம் மார்ச் 3 ஆம் தேதி நடைபெற்றது. இதில் பேசிய ஏஐடியுசி தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி, 10 ஆண்டு கால மோடி ஆட்சியில் போராடிப் பெற்ற தொழிலாளர் சட்டங்கள், உரிமைகள் பறிக்கப்பட்டு வருவது குறித்து எடுத்துரைத்தார். அமைப்புசாரா தொழிலாளர் சங்க தலைவர் பெருமாள் சாமி தலைமை தாங்க, ஏஐடியுசி மாநிலச் செயலாளர் ஆ.பாஸ்கர், ஏஐடியுசி வடசென்னை மாவட்டப் பொதுச்செயலாளர் ஏ.அருள், கட்டட சங்க மாவட்டப் பொருளாளர் வெங்கடேசன், ரேணுகா உள்ளிட்டோர் உரையாற்றினர். பயிற்சி முகாமில் பங்கேற்ற தோழர்களுக்கு ‘சங்கம் கட்டுவோம் நூல் வழங்கப்பட்டது.

## வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி. மாமியார் மறைவு

**விருதுநகர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.அழகிரிசாமியின் மாமியார் சற்குணம் (வயது78) உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பலனின்றி மரணமடைந்தார். அவரது இறுதிச் சடங்கு இராஜபாளையம் முகவூரில் நடைபெற்றது. தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ். எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ். எம்.எல்.ஏ., ஏஐடியுசி வி.ரவி, முத்துமாரி, இடைக்கமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், கணேசமூர்த்தி, இளைஞர் மன்ற லி.பகத்சிங், விதொச மாவட்டச் செயலாளர் வரதராஜன், ராஜா உள்ளிட்டோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## பேரணாம்பட்டில் கண்டன ஆர்ப்பாட்டம்



வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு பேருந்து நிலையம் முன்பு ஒன்பது அமைப்புகளின் சார்பாக, பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எல்.மணி தலைமை தாங்கினார். மாநில துணைத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஜி.லதா சிறப்புரையாற்றினார். சமூக ஆர்வலர் சௌந்தரபாண்டியன், பி.ஆர்.சுப்பிரமணி, ஜி.எஸ்.மூர்த்தி, எஸ்.பன்னீர்செல்வம், நிறைமதி செல்வம் ஜி.எம்.முனிரத்தினம், எஸ்.ஜெய்பீம் ராஜா, பாபு, முத்தரசன், எம்.கோபி உள்ளிட்டோரும் உரையாற்றினர். பேரணாம்பட்டு பேருந்து நிலையத்தை பழைய இடத்திலேயே விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தினர்.

## தேர்தல் நிதியளிப்பு



அரியலூர் மாவட்டத்தில் தேர்தல் நிதியளிப்பு மற்றும் கோரிக்கை மாநாடு நடைபெற்றது. மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மு.அ.பாரதி கட்சிக்கொடியை ஏற்றினார். பின்னர் பேசிய அவர், நாடாளுமன்ற தேர்தலின் முக்கியத்துவம், கட்சி ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். த.தண்டபாணி தலைமை தாங்க, மாவட்டச் செயலாளர் சொ.இராமநாதன் மற்றும் இரா. உலகநாதன், ஜி.ஆறுமுகம் உள்ளிட்டோர் பேசினர். மாநாட்டில் 150க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். மு.அ.பாரதியிடம் முதற்கட்டத் தேர்தல் நிதியாக ரூ. 1,59,400 வழங்கப்பட்டது.

போதிய பருவமழை பெய்யாததால் அரியலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விளைநிலங்கள் சிமெண்ட் ஆலைகளுக்கு கொடுக்கப்பட்டு விட்டதால், தொழில் வாய்ப்புகளை அரசு உருவாக்கித்தர வேண்டும் என்பது உள்ளிட்ட எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தென்காசி**

தேர்தல் நிதி அளிப்பு தென்காசி மாவட்டம் புளியங்குடி கட்சி அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் டி.இசக்கித்துரை தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் அவர்களிடம் ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் டி.சுப்பையா அவர்கள் இரண்டு லட்சம் நிதி வழங்கினார். மாவட்ட துணைசெயலாளர் எஸ். வேலாயுதம், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் எஸ். கிட்டப்பா, சமுத்திரக்கனி, பரமசிவம், வேலு, மாரியப்பன், அந்தோணிராஜ், பாலசுப்பிரமணியன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் பணியில் சிறப்பாக பங்கேற்போம்

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில நிர்வாகக்குழு கூட்டம் மாநில துணைத்தலைவர் பி.இராஜலட்சுமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கட்சியின் மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் இருவரும் கலந்துகொண்டு வழிகாட்டினர். கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் விவாதித்து எடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தல்: நாடாளுமன்ற தேர்தலில் மாவட்டங்களில் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றிக்கு வேலை செய்வது என்றும், இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கிடும் தொகுதிகளில் வேலை செய்வதற்கான வேலை பிரிவினை பின்னர் முடிவுசெய்து அறிவிக்கப்படும்.

தேர்தல் நிதி:

நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் கேரளாவில் வயநாடு தொகுதியில் நமது சங்கத்தின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் ஆனி ராஜா அவர்களை வேட்பாளராக கட்சி முடிவுசெய்து அறிவித்துள்ளது. கீதா முகர்ஜிக்கு பிறகு பெண் வேட்பாளரை தேர்வு செய்து வாய்ப்பளித்துள்ளது. ஆனிராஜா வெற்றிக்கு தமிழ்நாடு மாதர் சம்மேளன மாநிலக் குழு ஒத்துழைப்பது எனவும் ஒவ்வொரு மாதர் சங்க உறுப்பினரும் நிதி வசூல் செய்து கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

## உலக தாய் மொழி நாள் நிகழ்வுகள்

**மன்னார்குடி:** மன்னார்குடியில் முனைவர் மணிகனேசன் எழுதிய ஏன் இத்தனைப் பதற்றத்தை ஏற்படுத்துகின்றீர்கள்? என்ற நூலை ஈவேரா வெளியிட, அதன் முதல் பிரதியை எழுத்தாளரின் மனைவியே பெற்றுக் கொண்டது ஒரு தனிச்சிறப்பு.

இந்த நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ் நாட்டுப்புறவியல் துறைத்தலைவருமான பேராசிரியர் இரா.காமராசு அவர்களும் மற்றும் மாவட்ட கிளைப் பொறுப்பாளர்கள் கலை இலக்கிய ஆர்வலர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** ஸ்ரீ எஸ்.ராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி தமிழ்த் துறை, விருதுநகர் மாவட்ட நிர்வாகம் சார்பாக உலகத் தாய்மொழி தின விழா கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ராஜகுரு தலைமையேற்று தலைமை உரை வழங்கினார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப, கருத்தரங்கினை துவக்கி வைத்து 'தமிழ் நேற்று இன்று நாளை' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

உலகத் தாய்மொழிகள் தினத்தை எவ்வாறு நாம் கொண்டாட வேண்டும், இந்த ஆண்டுக்குரிய நோக்கம் என்ன, ஐக்கிய நாடுகள் சபையினுடைய யுனெஸ்கோ அறிவுறுத்தியபடி இந்த மொழிகளைக் காப்பதற்காக நாம் செய்ய வேண்டிய வேலைகளை பற்றி மிகவும் விரிவாக உரையாற்றினார்.

**தேவகோட்டை** சேவுகன் அண்ணாமலை கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் கரு.முருகன் நாம் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

கல்லூரி சுயநிதி தமிழ்த்துறை தலைவர் முனைவர் ஸ்ரீதேவி மற்றும் கல்லூரி மாணவர்கள் தாய்மொழி குறித்து பேசினர்.

பெருமன்ற மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**வேதாரண்யம்:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், வேதாரண்யம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து உலகத் தாய்மொழி நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் சோ.குமரேசமூர்த்தி தலைமை வகித்தார்.



கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டத் தலைவர் புயல் குமார், கிளைத் தலைவர் இள.தொல்காப்பியன், பேராசிரியர்கள் பி.பிரபாகரன், அ.மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கருத்தரங்கில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முனைவர் இரா.காமராசு, "மொழி எனும் ஆதிப் பயிர்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, கோவி.இராசேந்திரன், கவிஞர் மாதவன் ஆகியோர் உரையாற்றினர்.

பேராசிரியர் த.ராஜா வரவேற்றார். த.சுகன்யா நன்றி கூறினார்.

## பணி நிரந்தரம் கோரி மருந்தாளுநர்கள் ஆர்ப்பாட்டம்



பணிநிரந்தரம் செய்ய வலியுறுத்தி, சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் மருந்தாளுநர்களின் கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் பிப்ரவரி 29 அன்று நடைபெற்றது. ஆர்பிஎஸ்கே மருந்தாளுநர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஏ.ராஜேஸ் தலைமை தாங்க, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் தொடக்கிவைத்தார். ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், டாக்டர் ஏ.ஆர்.சாந்தி உள்ளிட்டோர் உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் 200 பெண்கள் உட்பட 400க்கும் மேற்பட்ட மருந்தாளுநர்கள் கலந்துகொண்டனர்.

## புதுப்பிக்கப்பட்ட குழந்தைகள் மையம், பெயர் பலகை திறப்பு



கோயமுத்தூர் மாநகராட்சி 14வது வார்டு உருமாண்டம்பாளையம் இங்கு அங்கன்வாடி மையம் எண் 232 செயல்பட்டு வருகிறது. 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் சித்ரா தங்கவேலு மறைந்த எம்.நல்லசாமி குடும்பத்தார் நிதி அளிக்க ரூபாய் ஒரு லட்சத்து 25 ஆயிரம் செலவில் சீரமைப்பு பணிகள் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் ரிப்பன் வெட்டி அங்கன்வாடி மையத்தின் நுழைவு வாயிலையும் பெயர் பலகையும் திறந்து வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ. மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, இந்திய தேசிய காங்கிரஸ் கே.மௌனசாமி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் உயர்நிலைக் குழு உறுப்பினர் ஆர்.ஆர்.மோகன் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாமன்ற உறுப்பினர்கள் சித்ரா தங்கவேல், சுமதி நாகராஜ், சாந்தாமணி பச்சமுத்து, வெ.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த முத்துசாமி தலைமை தாங்கினார். கிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

## ஏஐஒய்எப் தாம்பரம் தொகுதி மாநாடு

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தாம்பரம் தொகுதி மாநாடு வி.கோகுல் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் கே வி.சேகுவேராதாஸ் பங்கேற்று துவக்கி வைத்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டத் துணைச்செயலாளர் இ.பாலாஜி வாழ்த்துரை வழங்கினார். இளைஞர் பெருமன்றம் மாவட்ட குழு உறுப்பினர் பல்லாவரம் எல்.பிரவின்குமார் வாழ்த்துரை வழங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் எல்.மேகநாதன் நிறைவுரையாற்றினார். இதில் 11 பேர்கொண்ட தொகுதி குழு தேர்வு செய்யப்பட்டது. தொகுதி தலைவராக ஆர்.விமல்ராஜ், தொகுதி செயலாளராக ஜி.சஞ்சை, தொகுதி பொருளாளராக வி.யுகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 154. மாற்றியமைத்த விஞ்ஞானம்

**விஞ்ஞானம் வேர்விட்டால் ஆன்மீக மெய்ஞ்ஞானம்
வேரிற்று வீழும் விரைந்து.**

அறிவியல் நன்றாக வேர்விட்டு வளருமானால் ஆன்மீகத்தில் கூறப்படும் தவறான மெய்ஞ்ஞானம் எனப்படும் அறியாமை, வேரோடு வீழ்ந்துவிடும்.

**விஞ்ஞானம் இல்லாத மேதினியில் வீணடித்த
மெய்ஞ்ஞான மேதையரை யெண்.**

அறிவியல் அறிவே இல்லாது, மெய்ஞ்ஞானம் பேசிவந்த (ஆன்மீக) மெய்ஞ்ஞான மேதைகள், காலத்தை வீணடித்தார்கள் ! எண்ணுக.

# நூல் நயம்

## உணர்வும் உயிரும் தமிழே




“உணர்வும் உயிரும் தமிழே” என்கிற இந்த கவிதை தொகுப்பை ஓய்வு பெற்ற அரசு அலுவலரான சிவகாமி அவர்கள், தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக மிகச் சிறப்பான கவிதை வரிகளாக அமைத்துள்ளார்.

படித்தேன் தமிழை, உய்த்தேன் தமிழை, உணர்ந்தேன் தமிழை, செம்மொழி நம்மொழி, தேன்மொழி தமிழ் மொழி என தமிழின் சிறப்பை, பெருமையை உணர்வு பொங்க பாடுகிறார் நூலாசிரியர். விழுவது எல்லாம் எழுவதற்காகவே. எனவே விழுந்து விட்டோம் என்று கவலை கொள்ளாதே. ஏன் விழுந்தோம் என்று எண்ணி துணிந்து எழுக என தன்னம்பிக்கை ஊட்டுகிறார். நல்லதைக் கற்றுக் கொள்ளுங்கள், நல்லது மீது பற்றுக் கொள்ளுங்கள் என அறைக்கூவி அழைக்கிறார்.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்“ என்ற ஔவையாரின் கூற்றைக் கொண்டு, கல்வியின் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கு பெரியாரின் சிந்தனைகள், கருத்துக்கள் கை விளக்காக ஒளி வீசி வழிகாட்டும் என்பதை பெண்கள் உணர வேண்டும் என புதுமைப்பெண் கவிதை வலியுறுத்துகிறது.

பெண்ணே ‘பென்’ணை எடு, பேனா தலைகுனிந்தால், பெண் தலை நிமிர்வாள் என பெண் கல்வியின் அவசியத்தையும், முக்கியத்துவம் வலியுறுத்துகிறார்.

சிங்கப்பெண்ணே என்ற கவிதையின் மூலம், எழுதுகோலில் இருக்கிற மை கருப்போ, சிவப்போ, நீலமோ, பச்சையோ அல்ல, மாறாக அதில் உள்ள மை உண்மை, நேர்மை என்பதை கொண்டு மானுடர் வாழ்ந்தால், வையம் செழிக்கும் என்பதை இந்த கவிதை தொகுப்பு வலியுறுத்துகிறது. எனவே இந்த புத்தகத்தை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

**– இன்சுவை பாரதி**

| | | | |
|---|---|---|---|
| **நூலாசிரியர்** | **: ஞா. சிவகாமி** | | |
| **பக்கம்** | : 80 | விலை | : 100 |
| **வெளியீடு** | **: முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை – 40.** | | |

## கிராமத்துக்கே தினமும் விலையில்லா காய்கறிகள்




தமிழ்நாடு அரசு மகளிர் சுய உதவி குழுக்களின் மூலமாக அவர்களின் பொருளாதாரத்தையும், வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் கிராமப்புற மக்களின் அடிப்படை உணவு தேவைகளுக்கான காய்கறிகள், கீரைகள் போன்றவற்றை அரசு பொது இடங்களில் சுய உதவி குழு மகளிரை கொண்டு உருவாக்க முடியும்.

விலை இல்லாமல் அந்த கிராம தேவைக்கான காய்கறி, கீரை வகைகளை பெற்று தன்னிறைவு பெற முடியும் என்கிற கருத்தோட்டத்துடன் பாரதி சின்னசாமி எழுதிய, சுய உதவிக் குழுக்களின் மூலம் “கிராமத்திற்கே தினமும் விலையில்லா காய்கறிகள்”. இனி, காய்கறிகள் வாங்க பணம் தேவையில்லை என்கிற இந்த நூலை எழுதியுள்ளார்.

அரசாங்கமும், கிராம ஊராட்சி நிர்வாகமும், மகளிர் குழுக்களுடன் இணைந்து அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில், கிராமத்திற்கு தேவையான காய்கறி, கீரை மற்றும் பழவகை செடிகளை நட்டு பராமரிப்பதன் மூலமாக, அந்த கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். இதற்கு தேவையான தண்ணீர் வசதிகளை அந்த கிராம ஊராட்சி செய்து கொடுக்க வேண்டும். தோட்டக்கலைத் துறையும் சொட்டுநீர் பாசன வசதிகளை செய்து தரலாம்.

இதற்கு தேவையான பணியாளர்களை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட தொழிலாளர்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதன் மூலம் கிராமப்புற மக்களின் பொருளாதாரமும் மேம்படும், அவர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து மிகுந்த காய்கறி, கீரை, பழம் போன்றவையும் கிடைக்கும். எனவே, இவற்றை அரசு அனைத்து ஊராட்சிகளிலும் செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

– சமரன்

| | | | |
|---|---|---|---|
| **நூலாசிரியர்** | **: பாரதி சின்னச்சாமி** | | |
| **பக்கம்** | **: 32** | **விலை:** | **50** |
| **வெளியீடு** | **: எழில்மதி பதிப்பகம், பு.எண். 8 /166, ப. எண் 5/ 176, பூங்கா நகர் வடக்கு, தொப்பம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் – 641017.** | | |

# கலை இலக்கியப் பூங்கா

### இலக்கியத் தளத்தில் மேற்கொள்ள வேண்டிய கடமைகள்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் அண்ணா அறிவாலயத்தில் தேர்தல் பணிக்குழு திருவாளர் டி.கே.எஸ். இளங்கோவன் அவர்களை சந்தித்து மத்திய மாநில அரசுகள் கலை இலக்கியப் பண்பாட்டு தளத்தில் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் அடங்கிய தீர்மானம் வழங்கப்பட்டது.

மரு.ஏ.ஆர்.சாந்தி, கணபதி இளங்கோ, ஜி.ஆர்.ரவீந்திரநாத், முனைவர் லி. செல்வமீனா, ஆ.கோவிந்தராஜுலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

### மன்றக் கூட்டம்

அறந்தாங்கியில் த.நா.க.இ.பெ.மன்றக் கூட்டம்



நடைபெற்றது.

கவிஞர் இலக்கியா ரவிசங்கர் தலைமையேற்று, தலைமை உரை வழங்கி கவிதை ஒன்றையும் வாசித்தார். கவிஞர் க.அஜய்குமார் கோஷ் முன்னிலை வகித்தார்.

மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் அறம் சிறப்புரையாற்றினார்.

மாநிலத் துணைத் தலைவர் டி எஸ் நடராஜன், பேரா.கரு.முருகன், ஆசிரியர் சிவானந்தம் வாழ்த்துரை வழங்கினர்.

அத்தாணி அருணாசலம் கழுகுமனை செல்வம் கவிதை வாசித்தனர்.

சிறந்த மக்கள் சேவைக்காக மூக்குடி கருப்பையா பாராட்டப் பெற்றார். பொருளாளர் பிரவின் நன்றி கூறினார்.

### பாரதிப்பித்தன் நினைவரங்கம்

தஞ்சை மாநகரில் “பாரதிப்பித்தன் நினைவரங்கம்” பெசண்ட் அரங்கில் நடைபெற்றது.

பாடகர்கள் இந்துமணி, மரு.பா.கிருஷ்ணமூர்த்தி இருவரின் இசைப்பாடலோடு நிகழ்ச்சி தொடங்கியது. துணைச்செயலாளர் முனைவர் தி. சங்கீதா வரவேற்றார்.

எழுத்தாளர் நா.விச்வநாதன் தலைமை தாங்கினார்.

திருவையாறு அரசர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற முனைவர் சண்முக செல்வகணபதி, பேரா.முனைவர் பா.மதிவாணன், எழுத்தாளர் சிவக்குமார், பெருமன்றத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் மரு.த.அறம் உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

முனைவர் பாரதிப்பித்தனின் மகன் த.க.இ.பெ. தஞ்சை மாவட்டச் செயலாளர் முனைவர் அய்யாறு ச.புகழேந்தி ஏற்புரை வழங்கினார்கள்.

அரசர் கல்லூரியின் மேனாள் முதல்வர் சண்முகநாதன், அறிவார்ந்த மாணவர்களை உருவாக்கியதும், அவருடைய மார்க்சியச்சிந்தனையை தன் படைப்புகளில் பிரதிபலித்ததும், இலக்கிய ரீதியாக ஸ்தாபனத்தை எப்படிக் கட்டமைப்பது என்பதையும் ஒரு முன்னத்தி ஏரின் வலுவான செயல்பாடுகளை தொடர்கண்ணியாகப் பிடித்துக் கொள்ளும் நிகழ்வாக எங்களுக்கு அமைந்தது.

பேரா.முனைவர் திராவிடமணி தொகுத்து வழங்கினார்கள்.

### சர்வதேச குறும்படம் ஆவணப்பட விழா

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம்(மீடியா) சென்னை மாவட்டம் மற்றும் மறுபக்கம் சார்பாக பெரியார் திடலில் திரையிடல் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, முற்போக்கு சக்திகள் தலைமை தாங்கி நடத்திய இப் போராட்டம் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியது. இதை விவரிக்கும் ஆவணப் படம்,

பதின் பருவத்து பெண் குழந்தைகள் கடத்தப் பட்டு சிவப்பு விளக்கு பகுதியில் விற்கப்படுவதும் குழந்தைகளை போராடி மீட்டு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் பெற்றோருடன் சேர்ந்து வாழவும் செய்து வரும் சமூக செயல்பாட்டாளர்கள் பற்றிய ஆவணப்படம்

மூன்றாவது கிரீன் ஹாம் பெண்கள் நடத்திய உலக அமைதிக்கான இருபது ஆண்டுகளுக்கு மேலாக பெண்கள் நடத்திய மாபெரும் போராட்டம் பற்றிய ஆவணப்படம்,

நான்காவது, பெருந்தொற்றுக் காலத்தில் உலகப் பொது முடக்கம் ஏற்படுத்திய பாதிப்புகளிலிருந்து மீண்டு சீரடைந்து வருவது குறித்த ஆவணப்படம்,

ஐந்தாவது இந்தோனேசிய மெந்தாய் பழங்குடியினர் பற்றிய ஆவணப்படம் ஆகியவை திரையிடப்பட்டன.

இந்த திரையிடல் நிகழ்ச்சியை உலக சினிமா பாஸ்கரன் அவர்கள் சிறப்பாக ஒருங்கிணைப்பு செய்தார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் இயக்குநர் பாலு மணிவண்ணன், கணபதி இளங்கோ, மரு.ஏ.ஆர்.சாந்தி, ஜி.ஆர். ரவீந்திரநாத், முனைவர் லி.செல்வமீனா, ஆ.கோவிந்தராஜுலு, கவிஞர் யாழினி முனுசாமி, முனைவர் ஆ. பூபாலன், சுந்தர் திருவள்ளூர் முதலிய பொறுப்பாளர்களும் திரளான தோழர்களும் பங்கேற்று சிறப்பித்தனர்

### சிறுகதைப் பயிலரங்கு

புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமனறமும், இதயா மகளிர் கலை அறிவியல் கல்லூரி தமிழ் துறையும் இணைந்து மாணவர்களுக்கான எழுத்தாளர் கி. ரா நூற்றாண்டு நினைவு நாள் சிறுகதைப் பயிலரங்கு நிகழ்ச்சியை நடத்தியது.

கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் பாத்திமா நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்றார். கலை இலக்கியப் பெருமனறம் தலைவர் எல்லை. சிவக்குமார் முன்னிலை வகித்தார். கல்லூரி தமிழ் துறைத் தலைவர் அலமேலு வரவேற்புரையாற்றினார்.

புகைப்பட கலைஞர் இளவேனில் இயக்கத்தில் உருவான கி.ரா. வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் ‘இடைச் செவல்’ என்ற குறும்படம் .திரையிடப்பட்டது.

எழுத்தாளர்கள் அரும்பார்த்தபுரம் மது, சாகித்திய அகாதமி பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி, புதுவை பிரபா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

### சிறார் எழுத்துச் சிறப்புக் கூடுகை

நாகர்கோவில் கலை இலக்கியப் பெருமன்றத்தின் சிறார் எழுத்துச் சிறப்புக் கூடுகை நடைபெற்றது.

ஹமீம் முஸ்தபா அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைக்க, தமிழ்நாடு க.இ.பெ.த்தின் மாவட்டச் செயலாளர் முனைவர் எம்.விஜயகுமார் தலைமையேற்க, கிளையின் செயலாளர் கவிஞர் எம்.எம்.பைசல் வரவேற்றார்.

பேராசிரியர் வறீதையா கான்ஸ்தந்தின் அவர்களின், விரிவும் ஆழமும்கொண்ட பார்வையில் துவக்கம் பெற்று, அரங்கைக் கட்டிப்போட்டது.

‘சூழலியல் குறித்த விவாதத்தை எங்கிருந்து துவங்குவது?’ என்ற கேள்விக்கு, ‘குழந்தைகளிடமிருந்து’ என்று பதிலிருத்திருக்கிறார் இளவல் யோகேஸ்வரன்.



# அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் நாடு தழுவிய இயக்கம்






# தமிழ்நாடு முழுவதும் மார்ச் 5ல் முழக்கப் போராட்டம்

**டெல்லியில் கூடிய அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தேசியக்குழு கூட்டம், நாடு முழுவதுமான கோரிக்கைகளை விவாதித்து, அதற்கான இயக்கங்களை நடத்திட வழிகாட்டியது.**

அதன்படி தமிழ்நாட்டில் நடந்த போராட்டத்தில், ஒன்றிய அரசு விவசாயிகள் போராட்டத்தின்போது எழுதி கொடுத்த சி.2+50 அடிப்படையில் வேளாண் விளைப்பொருட்கள் அனைத்திற்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

அரசு கொள்முதல் உத்தரவாத சட்டம் கொண்டு வர வேண்டும்.

18 மாதங்களாகியும் விவசாயிகளை ஏமாற்றி வந்த ஒன்றிய அரசுக்கு கண்டனம்.

கடந்த 2023 பிப்ரவரி 13ஆம் தேதி டெல்லி நோக்கி சென்றஆயிரக்கணக்கான விவசாய குடும்பத்தினர் மீது காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டதற்கு கண்டனம்.

ஒரு விவசாயி உயிரிழப்பிற்கும், பலவிவசாயிகள் படுகாயத்திற்கும் காரணமான ஒன்றிய மற்றும் அரியானா மாநில அரசுகளுக்கு கண்டனம், இறந்து போன விவசாயிக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீட்டை ஒன்றிய அரசு உடன் வழங்கிட வேண்டும்,

மிக்ஜாம் புயல் பெருமழையால் 2023 டிசம்பரில் ஏற்பட்ட பெருமழையால் சென்னை சுற்றி 4 மாவட்டங்கள் பெரும் பாதிப்பு, 2024ஜனவரியில் ஏற்பட்ட தீவிர மழைப்பொழிவால் தென் மாவட்டங்கள் 5 ல் பாதிப்பு ஏற்பட்டது.

அதன்பின் அந்த பருவம் தவறியமழையால் காவிரி டெல்டா மாவட்டங்கள் பாதிப்பு, ஆக13 மாவட்டங்களில் வேளாண் பயிர்கள் மகசூல், மனித உயிரிழப்புகள், குடியிருப்புகள்சரிந்து விழுதல், பல பகுதிகளில் சாலைகள் சேதம் என இரண்டே மாதத்தில் மிகப்பெரிய பேரிழப்பு தமிழ்நாட்டில் ஏற்பட்டது.

மாநில அரசு முடிந்தளவு மாநில நிதியை கொண்டு நிவாரண பணிகளை உடனடியாக தொடங்கியது. இந்நிலையில், தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் பல தடவை வற்புறுத்தி கேட்டு வரும் 37 ஆயிரம் கோடி தேசிய பேரிடர் நிவாரண நிதியை ஒன்றிய அரசுஇதுவரைவிடுவிக்காததை கண்டித்து.. உடன் விடுவித்திட வேண்டும்,

மேகதாது அணை கட்டுமானத்திற்கான வரைவு அறிக்கைக்கு இசைவாக கருத்து தெரி வித்துள்ள ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரை கண்டிக்கிறோம், வரைவு அறிக்கையை நிராகரிக்க வலியுறுத்துகிறோம்,

தாளடி நெல் பயிர்கள் பாதிப்பிற் குரிய விடுபட்ட நிவாரணத்தை உடனடியாக தமிழக அரசு வழங்கிட வலியுறுத்தியும்,

தமிழ்நாட்டில் மாவட்ட, வட்ட அளவில் திருவாரூர், தூத்துக்குடி, விழுப்புரம், ஈரோடு, கரூர், நாகை, சேலம், கடலூர், தஞ்சை தெற்கு, தஞ்சை வடக்கு, திருச்சி, மயிலாடுதுறை, கடலூர், திருவள்ளூர், திருப்பத்தூர், வேலூர், கிருஷ்ணகிரி உள்ளிட்ட 21க்கும் மேற்பட்ட மாவட்ட மையங்களில் எழுச்சியுடன் நடைபெற்றது.

உணர்ச்சிகரமான கோஷங்களை விவசாயிகள் பல இடங்களில் முழக்கமிட்டார்கள்.

**திருவாரூர்** மையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ் பங்கு கொண்டு உரையாற்றினார்கள். மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தலைமை உரை ஆற்றினார்.

**கடலூர்** மாவட்டம் சார்பாக பண்ருட்டியில் விவசாய சங்க மாவட்ட தலைவர் யி.சிவக்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் AITUC மாவட்ட து.தலைவர் றி.துரை.விவசாய சங்க மாவட்ட செயலாளர் V.M.சேகர். சங்க பொறுப்பாளர்கள்.பண்ணீர் செல்வம்.சக்திவேவல். பாஸ்கர்.ஞானசேகர்.மோகன்.லாரன்ஸ்.ஆறுமுகம். மணிவண்ணன். தனபால். சுப்பிரமணி. செந்தில்நாதன்.உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

## மார்ச் 6 எங்கள் அரசியல் ஆசானுக்கு வீரவணக்கம்

**அமரர் சோ.அழகர்சாமி**
**15ம் ஆண்டு நினைவு நாள் மற்றும்**
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**
**பேரவைக் கூட்டம்**

நாள்:
06.03.2024 புதன்கிழமை
காலை 10.00 மணி,
இடம்: பாரதி சங்க கட்டிடம்,
எட்டயபுரம்



- கரிசலில் உதித்த செஞ்சூரியன்
- கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் ஐந்து முறை தேர்வு செய்யப்பட்டவர்
- தமிழ்நாடு விவசாய சங்க மாநிலத் தலைவர்

அப்பழுக்கற்ற மக்கள் தலைவர் தோழர்

**சோ.அழகர்சாமியின் வாழ்க்கை வரலாறு**

எட்டயபுரம் நினைவு நாள் சிறப்பு பேரவையில் கிடைக்கும்

**இவண்: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,** எட்டயபுரம் தாலுகா குழு

Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

# கட்டுமானத் தொழிலாளர் மத்திய சட்டத்தை முடக்காதே!

## பிப்ரவரி 29 அன்று நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்

**கட்டுமானத் தொழிலாளர்களின் மத்திய சட்டங்களை முடக்காதே, உலகத் தொழிலாளர் அமைப்பு வழிகாட்டுதல் படி கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு வழங்கு என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.**










**சென்னை:** சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அகில இந்திய கட்டட கட்டுமான தொழிலாளர் மகா சம்மேளனத்தின் தலைவர் கே.இரவி தலைமை தாங்கினார். தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், ஏஐடியுசி மாநிலத் துணைத் தலைவர் ஏ.எஸ்.கண்ணன், மாநிலச் செயலாளர் ஆ.பாஸ்கர், எஸ்.மயில்வாகனன், கட்டட சங்க மாநிலச் செயலாளர் இரா.துரைசாமி உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இந்தியப் பிரதமர், தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோருக்கு மனு கொடுக்கப்பட்டது.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஜி.பாலன் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் மணிகண்டன் வாழ்த்திப் பேசினார். 700 பெண்கள் உட்பட 800க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர்.

**விருதுநகர்:** அருப்புக்கோட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாகராஜன் தலைமை தாங்கினார். சிபிஐ செந்தில்குமார் மற்றும் சங்க நிர்வாகிகள் நடராஜன், தங்கராஜ், மாரியப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மயிலாடுதுறை:** சீர்காழியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாவட்டத் தலைவர் மதியழகன் தலைமை தாங்கினார். மாவட்டப் பொதுச்செயலாளர் ராமன், சிபிஐ மாவட்டச் செயலாளர் சீனிவாசன், ஏஐடியுசி ராஜ்மோகன், கட்டட சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**திருச்சி:** சோமரசம்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் எம்.ஆர்.முருகன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் சி.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் சுரேஷ் கோரிக்கை விளக்கி பேசினார்.

**ஈரோடு:** ஈரோடு நலவாரிய அலுவலக முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலச் செயலாளர் எஸ். சின்னச்சாமி தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகிகள் குணசேகரன், பாபு, ரஞ்சித், கந்தசாமி உள்ளிட்டோரும் திரளான தொழிலாளர்களும் கலந்துகொண்டனர்.

**நாகை:** நாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஐடியுசி மாநிலத் துணைத் தலைவருமான எம்.செல்வராஜ் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். ராமஜெயம் தலைமை தாங்கினார்.

**கடலூர்:** கடலூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் டி.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். ஏஐடியுசி கட்டட சங்க நிர்வாகிகளும் தொழிலாளர்களும் பங்கேற்றனர்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கோவிந்தராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் அருள் மற்றும் 26 பெண்கள் உட்பட 80 தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**கோவை:** கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ஆர்.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் சி.தங்கவேல் கட்டட சங்க மாநிலச் செயலாளர் நந்தினி உள்ளிட்ட நிர்வாகிகளும் 280க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் பங்கேற்றனர்.

**செங்கல்பட்டு:** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் வீராசாமி தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் ராஜ்குமார், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் ஜகாங்கீர், மாவட்டத் தலைவர் சங்கையா, மாநிலச் செயலாளர் வி.ஆதிமூலம் ஆகியோர் பங்கேற்றனர்.

**மதுரை:** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் இருளாண்டி தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்டத் தலைவர் நந்தா சிங், சிபிஐ மாவட்டச் செயலாளர் எம்,எஸ்.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தர்மபுரி:** ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் எம்.குழந்தைவேலு தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாநில துணைத்தலைவர் கே.மணி, சிபிஐ தேவராஜன், மாவட்டச் செயலாளர் ஏ.சி.மணி மற்றும் 400க்கு மேற்பட்ட கட்டிடத் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

**புதுக்கோட்டையில்** நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஜி.நாகராஜ் தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் ஜீவா, சிபிஐ மாவட்டச் செயலாளர் செங்கோடன், ஏஐடியுசி கே.ஆர். காமராஜ், கட்டட சங்க மாவட்ட செயலாளர் டி.ராஜா மற்றும் தொழிலாளர்கள் 53 பெண்கள் உட்பட 200 பேர் பங்கேற்றனர்.

**திருப்பூர்** மாவட்டம் திருமுருகன் பூண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கணேசன் தலைமை தாங்க, செயலாளர் மூர்த்தி, ஏஐடியுசி மாவட்டத் தலைவர் மோகன் உள்ளிட்டோர் உரையாற்றினர். உடுமலைப்பேட்டையில் சௌந்தர்ராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தென்காசி** மாவட்டம் புளியங்குடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்டச் செயலாளர் இசக்கி துரை, ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் சுப்பையா ஆகியோர் உரையாற்றினர். 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**சிவகங்கை** மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் ஏ.ஜி.ராஜா தலைமை தாங்கினார். பி.எல்.ராமச்சந்திரன், சிபிஐ சிவாஜி, காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இராமநாதபுரம்** தபால் தந்தி அலுவலகம் முன்பு, மாவட்டச் செயலாளர் தர்மராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்டச் செயலாளர் என்.எஸ். பெருமாள், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே.ராஜன், முருகானந்தம் லோகநாதன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

**தஞ்சாவூர்** மாவட்டம் பாபநாசத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம், சீனி.சுகுமாரன், பாலசுப்பிரமணியம் கலியபெருமாள் உரையாற்றினர். தஞ்சாவூரில் மாவட்டத் தலைவர் சேவையா, துரை மதிவாணன், முத்துக்குமரன், வியாகுல மேரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தூத்துக்குடி** மாவட்டத்தில் கோவில்பட்டி, கழுகுமலை, நாசரேத் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவில்பட்டியில் ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் சேது தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்டத் தலைவர் கிருஷ்ணராஜ், மாவட்டப் பொதுச் செயலாளர் லோகநாதன், மகாராஜன், காளீஸ்வரி, புஷ்பவல்லி, செல்வி உள்ளிட்ட நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

**விழுப்புரம்** மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் ஜெ.ஜெயமலர் தலைமை தாங்கினார். கே.கீர்த்தி, டி.அரசு, பி.வசந்தராஜ், ஜெயசீலன் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் இன்பஒளி, எம்.ராஜேந்திரன், திவ்யா, பிராங்ளின், எம்.ஆரோக்கியதாஸ், சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஏஐஒய்எப் மக்கள் சந்திப்பு இயக்கத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.



தென் சென்னையில் இளைஞர் பெருமன்றத்தின் மக்கள் சந்திப்பு இயக்கம் தொடர்ந்து பத்தாவது நாளாக நடைபெற்றது. திருவான்மியூர் பேருந்து நிலையம் அருகே பாசிச பாஜகவே அம்பலப்படுத்தி மக்களிடம் சென்று துண்டறிக்கைகள் கொடுத்தனர். தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாமன்ற உறுப்பினர் விசாலாட்சி கபிலனும் கலந்து துண்டறிக்கைகளை மக்களிடம் வழங்கி எடுத்துரைத்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, இளைஞர் பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர் முஜிபுர் ரகுமான், மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன் உட்பட ஏராளமான தோழர்கள் பரப்புரையில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.